தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மீன்பிடி தடைக்காலம் நீங்கியது: 45 நாள்களுக்குப் பிறகு கடலுக்கு செல்லும் விசைப் படகுகள்**



**திருவொற்றியூர்,**

மீன் வளத்தை மேம்படுத்தும் வகையில் வங்கக் கடலில் விசைப்படகுகளில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருந்த 45 நாள் தடைக்காலம் வியாழக்கிழமையுடன் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து வியாழக்கிழமை இரவு முதல் விசைப்படகு மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் செல்கின்றனர். கோடை காலங்களில் வங்கக் கடல் பகுதிகளில் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் காலம் என்பதால் இக்காலங்களில் விசைப்படகுகள் மூலம் மீன் பிடித்தால் மீன் குஞ்சுகளும் வலையில் சிக்கிவிடும். இதனால் படிப்படியாக மீன்வளம் குறையும் அபாயம் ஏற்படும் எனக் கருதி கடந்த 2000-ஆண்டு முதல் ஆண்டுதோறும் வங்கக் கடலில் விசைப்படகுகள் மூலம் மீன் பிடிக்க 45 நாள் தடை விதிக்கும் நடைமுறையை மத்திய அரசு அமல்படுத்தி வருகிறது. இதே போல் இந்த ஆண்டும் ஏப்ரல் 15 முதல் விசைப்படகுகளில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடைக் காலங்களில் மீனவர்கள் தங்களது விசைப் படகுகளைப் புதுப்பித்தல், பழுது நீக்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டனர். இந்தத் தடை வியாழக்கிழமை முடிவுக்கு வந்தது. இதனை

அடு0த்து தமிழகத்தில் சுமார் 10 ஆயிரம் விசைப் படகுகளில் வெள்ளிக்கிழமை முதல் மீனவர்கள் மீன் பிடிக்கச் கடலுக்குள் செல்வார்கள். காசிமேடு துறைமுகத்தில் வியாழக்கிழமை டீசல் நிரப்புதல், ஐஸ் கட்டிகளை கொண்டு குளிர்பதன பெட்டிகளைத் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகளில் மீனவர்கள் மும்முரமாக ஈடுபட்டனர். காசிமேடு மீன் பிடித்துறைமுகத்தில் மட்டும் சுமார் 1,200 விசைப் படகுகள் படிப்படியாகக் கடலுக்குச் செல்ல உள்ளன.

**மீன் விலை குறையுமா?:**

பெரும்பாலும் விசைப்படகுகள் மூலம்தான் அதிக அளவில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. பைபர் மற்றும் கட்டுமரங்கள் மூலம் குறைந்த அளவில்தான் மீன்களைப் பிடிக்க முடியும். மேலும் எடை அதிகம் கொண்ட பெரிய வகை மீன்கள், இரால் உள்ளிட்டவையும் விசைப்படகுகள் மூலம்தான் பிடிக்கப்படுகின்றன. இதுவரை மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்ததால் மீன்வரத்து குறைந்து விலையும் உயர்ந்தது. இந்நிலையில் தடை நீங்கி விட்டதால் இன்னும் ஒரு வாரத்தில் மீன் விலை குறைந்து இயல்பு நிலைக்குத் திரும்பும் என காசிமேடு மீன் வியாபாரிகள் தெரிவித்தனர்.

## குமரி அருகே கடலுக்குள் செயற்கை பவளப்பாறைகள்



கன்னியாகுமரி கடல் பகுதியில் செயற்கை பவளப்பாறை அமைக்கும் பணியில் ஊழியர்கள்.

**கன்னியாகுமரி,**

மீன்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கில், கன்னியாகுமரி அருகே கடலுக்குள் செயற்கை பவளப்பாறைகள் உருவாக்கும் பணியில் மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி மையம் ஈடுபட்டது. 2 நாள்களாக நடைபெற்று வந்த இப்பணி வியாழக்கிழமை நிறைவடைந்தது.

இயற்கையாக நடுக்கடலில் அமைந்திருக்கும் மணல் திட்டுகள், பவளப் பாறைகளில் அதிகமாக பாசி படிவதால் மீன்கள் அங்கு நிரந்தரமாக தங்கி இனப்பெருக்கம் செய்ய அவை பயன்பட்டு வருகின்றன. ஆனால், அவ்வழியே செல்லும் படகுகள், கப்பல்களால் அண்மைக்காலமாக பவளப்பாறைகள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மீன்வளம் வெகுவாகக் குறைந்துள்ளது தெரியவந்துள்ளது. இதையடுத்து, மீன்களைப் பாதுகாத்து இனப்பெருக்கத்தை அதிகரிக்க செயற்கை பவளப்பாறைகளை உருவாக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கைவிடுத்து வந்தனர்.

இதையடுத்து, ரூ.1 கோடியே 25 லட்சம் செலவில் தமிழகத்தில் திருவள்ளூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் செயற்கை பவளப்பாறைகளை உருவாக்க மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி மையம் முடிவு செய்தது. கன்னியாகுமரி தவிர ஏனைய 5 இடங்களிலும் பவளப்பாறைகள் உருவாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், கன்னியாகுமரி வாவத்துறை கடல் பகுதியில் இருந்து 3 கடல் மைல் தொலைவில் செயற்கை பவளப்பாறைகள் உருவாக்கும் பணி கடந்த இரு நாள்களாக நடைபெற்று வந்தது.

முன்னதாக, இப்பாறைகள் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுக வளாகத்தில் சிமென்ட், ஜல்லி, மணல் கலவைகளைக் கொண்டு தயார் செய்யப்பட்டன. தற்போது அங்கிருந்து பெரிய படகுகள் மூலம் கடலுக்குள் கொண்டுசெல்லப்பட்டு கிரேன்கள் மூலம் கடலுக்குள் முக்கோண வடிவில் பவளப்பாறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக தலா 170 டன்களைக் கொண்ட 200 பிளாக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து சென்னை மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி மைய அதிகாரி மோகன் மேலும் கூறியதாவது: செயற்கையாக அமைக்கப்பட்டுள்ள பவளப்பாறைகளில் இன்னும் 3 மாத காலத்துக்குள் அடர்த்தியாக பாசி படிந்துவிடும். இதன்பின்னர் மீன்கள் அங்கு நிரந்தரமாக தங்க ஆரம்பிக்கும். இதையடுத்து, மீன்கள்

இனப்பெருக்கம் அதிகரிக்கும். பவளப்பாறைகளில் இடுக்குகளில் மீன்குஞ்சுகள் தங்குவதற்கு ஏதுவாக இந்த பிளாக்குகள் அமைக்கப்பட்டுள்ளதால் பெரிய மீன்களிடம் குஞ்சுகள் இரையாவது தடுக்கப்படும். இந்தப் பவளப்பாறைகள் அமைந்துள்ள இடங்களில் வள்ளம், கட்டுமரங்களைச் சேர்ந்த மீனவர்கள் மட்டுமே மீன்பிடிக்க இயலும் என்றார் அவர்.

## ஏற்காட்டில் ஜூன் 7, 8-இல் கோடை விழா: சேலம் ஆட்சியர் அறிவிப்பு

**சேலம்,**

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் ஜூன் 7, 8-ஆம் தேதிகளில் 39-ஆவது கோடை விழா, மலர்க் கண்காட்சி நடைபெற உள்ளது.

ஏற்காட்டில் கோடை விழா, மலர்க் கண்காட்சி நடைபெறுவது குறித்த அனைத்துத் துறை அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் சேலத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் ஆட்சியர் க.மகரபூஷணம் கூறியது:

ஆண்டுதோறும் மே மாதத்தின் இறுதியில் கோடை விழா நடத்தப்படும். ஆனால், தேர்தல் காரணமாக நிகழாண்டு ஜூன் மாதத்தில் நடைபெற உள்ளது. நிகழாண்டு 39-ஆவது கோடை விழா, மலர்க் கண்காட்சி ஜூன் 7, 8-ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.

இந்த விழாவில் மாநில நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன், வேளாண்மை, சுற்றுலாத் துறைகளின் அரசு முதன்மைச் செயலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

விழாவில், வழக்கம் போலவே திரைப்படத் துறையினர், கிராமியக் கலைஞர்களின் இசை, நடனப் போட்டிகள் நடைபெற உள்ளன. திரைப்பட பின்னணிப் பாடகி சுசீலா, கிராமிய இசைப் பாடகி சின்னப்பொண்ணு உள்ளிட்டோரும், பிரபல திரைப்பட இசைக் குழுவினரும் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

கோடை விழாவையொட்டி, கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் நாய்கள், கால்நடைகள் கண்காட்சி, சுற்றுலாத் துறை சார்பில் படகுப் போட்டி, மகளிர் திட்டத்தின் சார்பில் கோலப் போட்டி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் பாரம்பரிய உணவுத் திருவிழா, கொழு கொழு குழந்தைகள் போட்டி, தவழும் குழந்தைகள் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளன.

இந்த நிகழ்ச்சிகள் ஏற்காடு அண்ணா கலையரங்கம், திறந்தவெளி மைதானம், சேர்வராயன் கோயில் , தலைச்சோலை ஆகிய 4 இடங்களில் நடைபெறும். மலர்க் கண்காட்சியில் சுமார் 20 ஆயிரம் மலர்த் தொட்டிகள் வைக்கப்பட உள்ளன. ஏற்காட்டில் உள்ள மலர்களைத் தவிர வெளியிடங்களில் இருந்தும் சில மலர்கள் பார்வைக்காக கொண்டு வரப்பட உள்ளன.

கோடை விழாவையொட்டி, ஏற்காடு ஏரியைச் சுற்றிலும் குதிரை சவாரிக்கும், மலிவு விலை உணவகத்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்களில் வருபவர்களின் வசதிக்காக மோட்டார் வாகன பழுது நீக்கும் சேவையும் செய்யப்பட உள்ளது.

சுற்றுலாப் பயணிகள் தங்களது வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாக ஏற்கெனவே உள்ள வாகன நிறுத்துமிடங்களுடன், தாவரவியல் பூங்கா, மரபியல் பூங்கா ஆகிய மேலும் இரண்டு இடங்களிலும் வாகன நிறுத்துமிடத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அவர்களின் வசதிக்காக வாகன நிறுத்துமிட கட்டணம் ரூ.40-இல் இருந்து ரூ.10 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

மலைப் பாதையில் நெரிசல் ஏற்படும் என்று கருதப்படுவதால் ஏற்காடு மலைப் பாதை ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட உள்ளது. அஸ்தம்பட்டி, கொண்டப்பநாயக்கன்பட்டி வழியாகச் செல்லும் பேருந்து தவிர இதர வாகனங்கள் அனைத்தும் குப்பனூர், அயோத்தியாப்பட்டினம் வழியாகவே செல்ல வேண்டும்.

இதைத் தவிர, சுற்றுலாப் பயணிகளின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், கழிப்பிடம், போக்குவரத்து வசதிகள் அனைத்தும் சிறப்பாகச் செய்யப்பட உள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்டக் காவல் துறையினர் செய்ய உள்ளனர் என்றார் அவர்.

## வேலூரில் 103 டிகிரி வெயில்

**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் வியாழக்கிழமை 103 டிகிரி வெயில் பதிவானது. இதேபோல சென்னை, பாளையங்கோட்டை, திருச்சி ஆகிய இடங்களிலும் 100 டிகிரி வெயில் பதிவானது. வடதமிழகத்தில் கடந்த சில நாள்களாக வெப்பச்சலனத்தின் காரணமாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வெயிலின் தாக்கம் குறைவாக உள்ளது. மேலும் கத்திரி வெயிலும் நிறைவடைந்துள்ளது.

வியாழக்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):

வேலூர் 103

பாளையங்கோட்டை 101

திருச்சி, சென்னை 100

கரூர் பரமத்தி 99

தருமபுரி 98

மதுரை, சேலம் 97

கோவை 92

கொடைக்கானல் 73

இந்த நிலையில் திருப்பூர், திண்டுக்கல், மதுரை, கோவை, விருதுநகர், ஈரோடு, தருமபுரி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களின் சில பகுதிகளில் மழை பெய்துள்ளது. மேலும் தமிழகத்தின் சில இடங்களில் வெள்ளிக்கிழமையும் (மே 30) மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## இன்றும், நாளையும் கால்நடைகள் மருத்துவ முகாம்

**காஞ்சிபுரம்,**

தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மருத்துவ முகாம் நடைபெறும் என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கா.பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில் கடந்த 2011-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம் தொடங்கியது.

இத்திட்டத்தில் வழங்கப்படும் மாடுகள் மற்றும் ஆடுகளை நன்கு பராமரிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார். அதன்படி கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு கடந்த 2 ஆண்டுகளாக தமிழ் புத்தாண்டின்போது சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலும் கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையிலும், ஆடுகளின் எடையை அதிகரிக்கும் வகையிலும் மே 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்களும் நடைபெறவுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடை மருத்துவப் படிப்பு இன்றுடன் முடிகிறது விண்ணப்ப விநியோகம்

**சென்னை,**

கால்நடை மருத்துவ அறிவியல் படிப்பு கலந்தாய்வுக்கான (கவுன்சிலிங்) விண்ண ப்ப விநியோகம் வெள்ளிக்கிழமையோடு (மே 30) நிறைவுபெறுகிறது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க ஜூன் 2 ஆம் தேதி கடைசி நாள். கால்நடை மருத்துவம் (பி.வி.எஸ்சி.), பி.டெக். உணவு தொழில்நுட்பம், பி.டெக். கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகிய படிப்புகளில் மாணவர் சேர்க்கைக் கான கலந்தாய்வை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் நடத்துகிறது.

கலந்தாய்வு செப்டம்பர் முதல் வாரம் அல்லது இரண்டாவது வாரத்தில் நடத்தப்படு ம். தரவரிசைப் பட்டியல் ஜூலை மாதம் வெளியிடப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் தமிழகம் முழுவதும் உள்ள 14 மையங்களில் மே 30-ஆ ம் தேதி வரை விநியோகிக்கப்படும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை ஜூன் 2-ஆ ம் தேதி மாலை 5.45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்தை தபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். www.tanuvas.ac.in என்ற பல்கலைக்கழக இணையதளத்தைப் பயன்படுத்தி ஆன்-லைன் மூலமும் விண்ணப் பிக்கலாம். இதுவரை 19 ஆயிரத்து 56 விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள் ளன. இதில் கால்நடை மருத்துவப் படிப்பில் சேருவதற்காக மட்டும் 14 ஆயிரத்து 738 விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

## <u>மதுரை மாவட்டத்துக்கு ரூ.7,382 கோடியில் கடன் திட்டம்</u>

**மதுரை,**

மதுரை மாவட்டத்துக்கு நடப்பு நிதியாண்டுக்கு ரூ.7,382 கோடியில் கடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக விவசாயத்துக்கு ரூ.3,523 கோடியும், சிறு, குறுந்தொழில்களுக்கு ரூ.1,229 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தின் முன்னோடி வங்கியால் தயாரிக்கப்பட்ட 2014-15 ஆம் ஆண்டுக்கான கடன் திட்ட அறிக்கையை ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் வியாழக்கிழமை வெளியிட்டார். இதன் முதல் பிரதியை கனரா வங்கி துணைப் பொது மேலாளர் ஹரிகரன் பெற்றுக் கொண்டார்.

திட்ட அறிக்கையின்படி மதுரை மாவட்டத்தில் உள்ள வங்கிகளால் நடப்பு ஆண்டுக்கு ரூ.7,382 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் முன்னுரிமைக் கடன் ரூ,6,290 கோடியாகவும், முன்னுரிமை இல்லாத கடன் ரூ.1091.20 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நிலவும் நீர் பற்றாக்குறை, குறைந்துபோன நிலத்தடி நீர்மட்டம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு விவசாயத்துக்கான கடன் தொகை கடந்த ஆண்டைக்காட்டிலும் 9.48 சதவீதம் அதிகமாக, அதாவது ரூ.3,523.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அடுத்ததாக குறு மற்றும் சிறு தொழில்களுக்கு கடந்த ஆண்டைக்காட்டிலும் 26 சதவீதம் அதிகமாக ரூ.1,229.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதர முன்னுரிமைக் கடன்களுக்கு ரூ.1,537 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டில் (2013-2014) மதுரை மாவட்டத்தின் கடன் இலக்காக ரூ.5,519.81 கோடி நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும் இலக்கைக் காட்டிலும் ரூ.197.60 கோடி அதிகமாக ரூ.5,717.41 கோடி வழங்கப்பட்டுள்ளது. விவசாயக்

கடனாக ரூ.3,347.12 கோடி வழங்கப்பட்டுள்ளது. இலக்கைக்காட்டிலும் அதிகமாக, அதாவது 104 சதவீதம் அளவுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

கடன் திட்ட அறிக்கை வெளியீடு நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.அருண்மணி, கனரா வங்கி உதவிப் பொதுமேலாளர் க.பாலவிநாயகம், நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் ஆர்.சங்கரநாராயணன், முன்னோடி வங்கி மேலாளர் சி.மனோகரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## பழனி அருகே வரதமா நதி அணைக்கு நீர்வரத்து

**பழனி,**

பழனி அருகே, கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பெய்த மழையால் வரதமாநதி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

கடந்த பல மாதங்களாக தமிழகத்தின் பல பகுதிகளிலும் பருவமழை பெய்த நிலையில், பழனி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வந்தது. இந்நிலையில், கொடைக்கானல் மலைப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்தது. இதனால், வரதமாநதி அணைக்கட்டுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பழனி-கொடைக்கானல் சாலையில் உள்ள வரதமாநதி அணைக்கட்டின் மொத்த உயரம் 67.42 அடியாகும்.

தற்போது, 43.24 அடி உயரத்துக்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. அணைக்கு விநாடிக்கு 20 கனஅடி நீர்வரத்து உள்ளது. நீர் வெளியேற்றம் 2 கனஅடியாகும்.

## வேடசந்தூர் பகுதியில் 130 மி.மீட்டர் மழை பதிவு

**திண்டுக்கல்,**

அக்னி நட்சத்திரத்தின் நிறைவு நாளான புதன்கிழமை, திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் மழை பெய்தது.

இதில், வேடசந்தூர் பகுதியில் அதிகபட்சமாக 130 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழையளவு விவரம் (மி.மீட்டரில்):

திண்டுக்கல் 11.60, கொடைக்கானல் 05.40, நத்தம் 02.00, நிலக்கோட்டை 37.20, பழனி 41.00, சத்திரபட்டி 35.40, வேடசந்தூர் புகையிலை மையம் 131.08, கொடைக்கானல் போட் கிளப் 02.00, காமாட்சிபுரம் 22.80. வியாழக்கிழமை காலை வரை மாவட்டத்தில் மொத்தம் 418.50 மி.மீ. மழை அளவு பதிவாகியுள்ளது.

## வேளாண்மைக் கண்காணிப்பு மையம் தேனியில் தொடக்கம்

**தேனி,**

தேனி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில், வேளாண்மை கண்காணிப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இது குறித்து, மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் கோ. சுந்தரம் கூறியது:

மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை குறித்த காலத்தில் தொடங்கும் என்பது எதிர்பார்ப்பு.

குறுவை சாகுபடி பணிகள் தொடங்க உள்ளதால், விவசாயிகளுக்கு தேவையான விதைகள், உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்து, மண் மாதிரி பரிசோதனை, இயற்கை இடர்பாடு மற்றும் சேதாரம், வானிலை அறிவிப்பு விவரம், விவசாயிகளுக்கு எழும் சந்தேகத்தை நிவர்த்தி செய்தல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் ஆகியவற்றுக்கு, மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்மைக் கண்காணிப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளது. வேளாண்மைக் கண்காணிப்பு மையத்தில் பணியில் உள்ள வேளாண்மை அலுவலரை, அலுவலக தொலைபேசி எண்: 04546-251561, செல்போன் எண்: 94427-03702 ஆகியவற்றில் விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

## மே மாதத்தில் சிவகங்கை மாவட்டத்தில் 183 மி.மீ மழைப் பதிவு

**சிவகங்கை,**

கோடைக் காலத்தில் மே மாதத்தில் மட்டும் சிவகங்கை மாவட்டத்தில் சராசரியாக 183.31 மிமீ மழை பதிவாகி உள்ளது. கடந்த ஆண்டு தமிழகத்தில் 3 புயல்கள் உருவான போதும் சிவகங்கை மாவட்டத்தில் மழை ஏதும் பதிவாகவில்லை.

கந்தகபூமியான சிவகங்கையில் தொடர்ச்சியாக கடும் வறட்சி நிலவியதால் விவசாயிகள் வானம் பார்த்த பூமியாகவே விவசாயத்தை மேற்கொண்டனர். மழையை எதிர்பார்த்து நகரில் உள்ள ஊருணிகள், கண்மாய்கள், குளங்கள் நல்ல முறையில் தூர்வாரப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

மே மாதம் 4ஆம் தேதி அக்னி நட்சத்திரம் துவங்குவதற்கு முன்னரே மே 1ஆம் தேதி மாவட்டத்தின் சில இடங்களில் மழை பெய்யத் துவங்கியது. சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மே மாதம் 4 ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை 4 நாள்கள் தொடர்ச்சியாக மழை பெய்ததால் நீர்நிலைகளில் மழை நீர் சேகரமாகத் துவங்கியது.

இந்நிலையில் புதன்கிழமை (மே 28) அக்னி நட்சத்திரம் நிறைவு நாளில் நல்ல மழை கொட்டித் தீர்த்தது. வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் சிவகங்கை நகரில் 40மிமீ, காரைக்குடி 8.2, திருப்புவனத்தில் 30.2, திருப்பத்தூரில் 14, இளையான்குடியில் 4 மிமீ மழை பதிவானது.

மே மாதம் 1 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை காரைக்குடியில் 185.2மிமீ, மானாமதுரையில் 175 மிமீ, சிவகங்கையில் 211மிமீ, திருப்புவனத்தில் 274மிமீ, திருப்பத்தூரில் 135.8மிமீ, இளையான்குடியில் 160.4மிமீ, தேவகோட்டையில் 141.8மிமீ மழை பதிவாகி உள்ளது. இந்த மாதத்தில் மட்டும் சிவகங்கை மாவட்டத்தில் சராசரியாக 183.31மிமீ மழை பதிவாகி உள்ளது. கோடையில் கிடைத்த இந்த மழை மாவட்ட விவசாயிகளையும், பொது மக்களையும் பெரிதும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## கறவை மாடுகள், ஆடுகளுக்கான மருத்துவ முகாம்

**விருதுநகர்,**

விருதுநகர் மாவட்டத்தில் விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் ஆகியவைகளுக்கான இலவச கால்நடை சிகிச்சை முகாம் வட்டார அளவில் வெள்ளிக்கிழமை தொடங்கி, தொடர்ந்து 3 நாள்களுக்கு நடைபெற உள்ளது. இது குறித்து ஆட்சியர் டி.என். ஹரிஹரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஏழை, எளிய பெண்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் அரசு சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் தமிழக

அரசின் சிறப்பு திட்டம் மூலம் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள், கறவை மாடுகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. எனவே கறவை மாடுகளின் உற்பத்தியை பெருக்கவும், செம்மறி, வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்கவும் குறிப்பிட்ட நாள்களில் கால்நடை மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்பட உள்ளது. எனவே கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் பெற்ற பயனாளிகள் இந்த கால்நடை மருத்துவ முகாமில் பங்கேற்று பயனடையலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அருப்புக்கோட்டை: 64 மி.மீ. மழை பதிவு

**அருப்புக்கோட்டை,**

அருப்புக்கோட்டையில் புதன்கிழமை இரவு பலத்த மழை பெய்தது. மழை அளவு 64 மி.மீ. என பதிவாகியுள்ளது. அருப்புக்கோட்டை உள்பட தென்மாவட்டங்களில் தென்மேற்கு பருவ மழை ஆண்டின் பெருமளவு மழை பதிவாகும் காலமாகும். இத்தென்மேற்கு பருவமழை அக்கினி நட்சத்திரம் முடிந்ததும் துவங்குவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டில் அக்கினி நட்சத்திரம் முடிந்த நாளிலேயே மழையும் துவங்கியுள்ளது. புதன்கிழமை மாலை வரை வெயில் சுட்டெரித்தது. பின்னர் மாலை 6.30 மணியிலிருந்து பலத்த காற்று வீசத் தொடங்கியது. சிறிது நேரத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. தொடர்ந்து இடிமின்னலுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழையளவு 64 மி.மீ. ஆகப் பதிவானது. இதுபோல் அடுத்தடுத்து தொடர்ந்து மழை பெய்தால் விவசாயம் செழிக்கும் என்று விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## "1 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை'

**விருதுநகர்,**

தமிழ்நாடு உயிர் பண்ணைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் மூலம் விவசாயிகள் பங்களிப்போடு 1 லட்சம் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட இருப்பதாக மண்டல வனப் பாதுகாவலர் வெங்கடேஷ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

விருதுநகர் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையடிவார பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் வனத்துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல், விவசாயிகள் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான திட்டங்களும் செயல்படுத்தப்படுகிறது. தற்போது, தமிழ்நாடு உயிர் பண்ணைப் பாதுகாப்பு திட்டத்தின் மூலம் விவசாயிகளின் பங்களிப்போடு மலையடிவார விளைநிலங்களில் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம் வனத்துறையால் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் மா, பலா, சப்போட்டா, எலுமிச்சை, நாவல், வேலாமரம், புளி மற்றும் நீண்ட கால பயன் தரும் தேக்கு, மருதமரம், வேம்பு உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகளையும் வைத்து விவசாயிகள் பயனடையலாம்.

இத்திட்டத்தில் பயன் அடைய உள்ள விவசாயிகளின் விளைநிலங்களில் போதுமான தண்ணீர் வசதியுடன், மரக்கன்றுகள் வளரும் தன்மையுடைய நிலமாகவும் இருப்பது அவசியம் ஆகும். இதில் ஒரு ஏக்கருக்கு 200 முதல் 250 மரக்கன்றுகள் வரையில் வைத்துக் கொள்ளலாம். இந்த நிலங்களில் என்னென்ன வகையான மரக்கன்றுகள் வைத்தால் பயனுள்ளவையாக இருக்கும் என்பதை விவசாயிகளே தேர்வு செய்து கொள்ள வேண்டும். இதுபோன்ற விவரங்களுடன், தேவைப்படும் மரக்கன்றுகள் குறித்து அந்தந்தப் பகுதி வனத்துறை அதிகாரிகளை அணுகி தெரிவிக்க வேண்டும்.

அதன் அடிப்படையிலேயே நாத்தாங்கால் பண்ணைகளில் மரக்கன்றுகள் வளர்க்கப்பட உள்ளது. இந்த மரக்கன்றுகளை விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் வைத்து தொடர்ந்து பராமரித்து வர வேண்டும். இதற்காக ஆண்டுக்கு ஒரு மரக்கன்றுக்கு தலா ரூ.5 பராமரிப்பு ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இத்தொகை மரக்கன்றுகளில் இருந்து பலன் எடுக்கும் வரையில் 6 ஆண்டுகள் வரையில் வழங்கப்படும். இதேபோல், உயிர் பண்ணை பாதுகாப்புத் திட்டம் மூலம் புல் முதல் விலங்கினங்கள் வரை பாதுகாக்கப்படும்.

அந்த வகையில் விலங்கினங்கள் தரைப்பகுதிக்குள் வந்து பயிர்களை நாசம் செய்வது தடுக்கப்படும். இதற்காக பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள்

அடர்த்தியாகவும் விரைவாகவும் வளரும் தன்மையுடைய மரக்கன்றுகள் வைக்கப்பட இருக்கின்றன.

மேற்குத் தொடர்ச்சி அடிவார கிராம மக்கள் மற்றும் பழங்குடியினர் தங்கள் வருவாயை உயர்த்திக் கொள்ளும் வகையில் பலன் தரும் மூலிகை மற்றும் கொங்குலிங்கம் (சாம்பிராணி), லவங்க பட்டை மரக்கன்றுகள் வைக்கப்பட இருப்பதாகவும் மண்டல வனப்பாதுகாவலர் வெங்கடேஷ்வரன் தெரிவித்தார்.

## கால்நடை குடற்புழு நீக்க சிகிச்சை முகாம்

**தேனி,**

தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மே 30, 31 ஆகிய தேதிகளில், கால்நடை குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் நடைபெற உள்ளது. கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற உள்ள இந்த முகாமில், அரசு திட்டத்தின் கீழ், விலையில்லா வெள்ளாடுகள் பெற்ற பயனாளிகள் மற்றும் ஏனைய விவசாயிகள் தங்களது கால்நடைகளை அழைத்து வந்து, குடற்புழு நீக்கம் செய்து கொள்ளலாம் என்று, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி அறிவித்துள்ளார்.

## நெகமத்தில் 72 மி.மீ. மழை

**கோவை,**

நெகமம் பகுதியில் வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 72 மி.மீ. மழை பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்):

சோலையாறு 5, பரம்பிக்குளம் 42, தூணக்கடவு 37, பெருவாரிப்பள்ளம் 41, ஆழியாறு 25.4, திருமூர்த்தி அணை 13, அமராவதி அணை 5, அப்பர் நீராறு 12, லோயர் நீராறு 16, அப்பர் ஆழியாறு 4, காடம்பாறை 4, மாக்கினாம்பட்டி 48.1, மணக்கடவு 8.3, பொங்கலூர் 12, வால்பாறை 49.5, நல்லூர் 9.

**<u>ஆடுகளுக்கு இரண்டுநாள் குடற்புழு நீக்க முகாம்</u>**

**கோவை,**

வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கான குடற்புழு நீக்க முகாம் வெள்ளி (இன்று), சனிக்கிழமை ஆகிய இரு நாள்கள் நடைபெற உள்ளது.

தமிழக அரசின் விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு 2011-12, 2012-13ல் கால்நடைகளை சிறப்பாகப் பராமரித்த பயனாளிகளுக்கு மேற்படி ஆண்டுகளின் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்ட வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்க மாநிலம் முழுவதும் மே 30, 31 ஆகிய நாள்களில் (இன்றும் நாளையும்) குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது.

விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி கொள்ளலாம் என்று ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

**<u>உடுமலை வட்டத்தில் பலத்த மழை: அதிகபட்சமாக 59 மி.மீ. பதிவு</u>**

**உடுமலை,**

உடுமலையில் 2 வருடங்களுக்குப் பிறகு புதன்கிழமை மாலையில் சுமார் 3 மணி நேரம் பெய்த பலத்த மழையால் அதிகபட்சமாக 59 மி.மீ. பதிவாகியுள்ளது.

உடுமலை நகரில் புதன்கிழமை மாலை 4 மணி அளவில் இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாகப் பெய்த இம் மழையால் வ.உ.சி. வீதி, சத்திரம் வீதி, பழைய பேருந்து நிலையம், பசுபதி வீதி, கச்சேரி வீதி உள்ளிட்ட அனைத்து சாலைகளிலும் வெள்ளம் போல் மழைநீர்

பெருக்கெடுத்து ஓடியது. கழுத்தறுத்தான் பள்ளம், தங்கம்மாள் ஓடையில் தண்ணீர் வழிந்தபடி சென்றது.

உடுமலை நகரில் பாதாளச் சாக்கடைப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் குண்டும், குழியுமாக இருந்த சாலைகள் தற்போது சேறும், சகதியுமாக மாறிவிட்டது. இதனால் பொது மக்கள், இரு சக்கர வாகன ஓட்டிகள் பாதிக்கப்பட்டனர். உடுமலை வட்டத்தில் அமராவதி நகர், குமரலிங்கம், மடத்துக்குளம், பெதப்பம்பட்டி, குடிமங்கலம் கிராமங்களிலும் பலத்த மழை பெய்தது. இதனால், பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

மழை விவரம் (மில்லி மீட்டரில்): உடுமலை 59, அமராவதி நகர் 5, திருமூர்த்திமலை 13, நல்லாறு 9 எனப் பதிவாகியிருந்தது. மேலும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்த மழையால் அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

## மாவட்டத்தில் சராசரியாக 49.46 மி.மீ. மழை பதிவு

**திருப்பூர்,**

திருப்பூர் மாவட்டத்தில், வியாழக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 49.46 மி.மீ., மழை சராசரியாகப் பதிவாகி உள்ளது.

அவிநாசியில் 9 மி.மீ., திருப்பூரில் 56.20, பல்லடத்தில் 9.20, தாராபுரத்தில் 160, காங்கயத்தில் 46.80, மூலனூரில் 6 மி.மீ., என மொத்தம் 346.20 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. சராசரி மழை அளவு 49.46 மில்லி மீட்டராகப் பதிவானது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 46.60 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 46.60 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,264 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.67 டி.எம்.சி.

## நீலகிரியில் விலையில்லா ஆடுகளுக்கு இலவச குடற்புழு சிகிச்சை

**உதகை,**

நீலகிரியில் தமிழக அரசின் சார்பில் விலையில்லா ஆடுகளுக்கு இலவச குடற்புழு சிகிச்சை அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்டத்தில் தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆடுகளின் எடையை அதிகரிக்க கால்நடை பராமரிப்புத் துறையினரால் குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் வெள்ளி, சனிக்கிழமை (மே 30, 31) நடத்தப்படுகிறது.

அதன்படி, உதகை ஊராட்சி ஒன்றியத்தில் பாலகொலா, எப்பநாடு, ஆனைகட்டி மற்றும் மசினகுடி பகுதிகளிலும், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் பேரட்டி, வண்டிசோலை, பர்லியாறு ஆகிய பகுதிகளிலும், கோத்தகிரி பகுதியில் ஜக்கனாரை, கடினமாலா, கொணவக்கரை, கெங்கரை மற்றும் கொடநாடு பகுதிகளிலும், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேரங்கோடு, நெலாக்கோட்டை மற்றும் ஸ்ரீமதுரை பகுதிகளிலும் குடற்புழு சிகிச்சை முகாம் நடத்தப்படுகிறது. இதில், 2011-12, 2012-13 மற்றும் 2013-14 ஆகிய 3 ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்டு பயனடைந்த பயனாளிகள் மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் பங்கேற்று பயனடையலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றும், நாளையும் கால்நடைகளுக்கு இனப் பெருக்கம், குடற்புழு நீக்க முகாம்

**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் கறவைப் பசுக்களுக்கு, இனப் பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் வெள்ளி மற்றும் சனிக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து ஆட்சியரின் செய்திக் குறிப்பு: விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் செம்மையாக செயல்படுத்தி வருகிறார். இதில் மாவட்டத்தில் கறவை பசுக்கள் இதுவரை 1950-ம், 99 ஆயிரத்து 4 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை பயனாளிகள் நல்ல முறையில் பராமரிக்க மாவட்டத்தில் இரு தினங்களும் கறவை பசுக்களுக்கு இனப் பெருக்க மருத்துவப் பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடத்தப்படுகிறது. இதை திட்டப் பயனாளிகள் மட்டுமின்றி அனைத்து கால்நடை விவசாயிகளும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## ஒருங்கிணைந்த பண்ணை திட்டம்

**போளூர்,**

சேத்துப்பட்டை அடுத்த இந்திரவனம் கிராமத்தில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணை திட்ட முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஜெயச்சந்திரன் கலந்துகொண்டு 12 பேருக்கு வரைவோலை வழங்கினார். சேத்துப்பட்டு வேளாண்மைத் துறை சார்பில் இந்திரவனம் கிராமத்தில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணை திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் 2012-2013 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணை திட்டத்தின்கீழ் பயனடைந்த 12 விவசாயிகளுக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஜெயச்சந்திரன் வரைவோலை வழங்கினார். மேற்படி திட்டத்தில் கறவை மாடு வளர்த்தல், ஆடு வளர்த்தல், நாட்டுக்கோழி வளர்த்தல், மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு தயாரித்தல் போன்ற செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. சேத்துப்பட்டு வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை, விரிவாக்க அலுவலர் ஏழுமலை, உதவி வேளாண்மை அலுவலர்கள் பாபு, கம்பை சிவன் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## தேவூர் விற்பனை மையத்தில் ரூ 30 லட்சத்திற்கு எள் விற்பனை

**திருச்செங்கோடு,**

தேவூர் எள் விற்பனை மையத்தில் ரூ 30 லட்சத்துக்கு எள் விற்பனையானது. திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையின் கீழ் செயல்படும், தேவூர் எள் விற்பனை மையத்துக்கு பூலாம்பட்டி, ஆடையூர், பில்லுக்குறிச்சி, புள்ளாக்கபட்டி, கல்வடங்கம் ஆகிய

பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் எள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில், 450 எள் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதில், ஒரு கிலோ வெள்ளை எள் ரூ 103-க்கும், கருப்பு ரக எள் 101-க்கும், சிவப்பு ரக எள் ரூ 87.80-க்கும் விற்பனையானது. முத்தூர், காங்கேயம், திண்டுக்கல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று எள் மூட்டைகளை கொள்முதல் செய்தனர். விவசாயிகளுக்கு உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. இந்த தகவலை சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

## பருத்தி வரத்து சரிவு: ரூ.12 லட்சத்துக்கு ஏலம்

**நாமக்கல்**,

நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு கடந்த வாரங்களைவிட பருத்தி வரத்து பாதியாகக் குறைந்ததால், மொத்தம் ரூ.12 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டன.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத்துக்கு நாமக்கல் மாவட்டம் மட்டுமின்றி அருகேயுள்ள சேலம், கரூர், திருச்சி மாவட்டங்களில் இருந்தும் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு விவசாயிகள் கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் 600 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதில், ஆர்சிஹெச் குவிண்டால் ரூ.4,716 முதல் ரூ.5,139 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5,270 முதல் ரூ.5,709 வரையும் என மொத்தம் ரூ.12 லட்சத்துக்கு விற்பனையானது.

கடந்த வாரம் (மே 22) நடைபெற்ற ஏலத்தில், 1,200 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதில், ஆர்சிஹெச் குவிண்டால் ரூ.4,519 முதல் ரூ. 5,419 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5,459 முதல் ரூ.5,589 வரையும் என மொத்தம் ரூ.20 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டன. அதற்கு முந்தைய வாரம் (மே 15) 2,000 மூட்டைகள் விற்பனைக்கு வந்ததில், ஆர்சிஹெச் குவிண்டால் ரூ.4,900 முதல் ரூ.5,400

வரையும், சுரபி குவிண்டால் ரூ.5,750 முதல் ரூ.6,500 வரையும் என மொத்தம் ரூ.30 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டன. இந்த நிலையில், கடந்த இரு வாரங்களை விட, இந்த வாரம் பருத்தி வரத்து பாதியாகக் குறைந்துள்ளது. இதற்கு அறுவடை சீசன் முடிந்ததே முக்கியக் காரணம் என்றும், ஜூன் மாத இறுதியிலிருந்து பருத்தி வரத்து அதிகரிக்கக் கூடும் என்று கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

## "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தரமற்ற விதைகளை விற்பனை செய்யவில்லை'

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தரமற்ற விதைகளை விற்பனை செய்யவில்லை என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் மறுப்பு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தனியார் விதை விற்பனை நிலையங்களில் தரமற்ற விதைகளை (முள்ளங்கி) வாங்கி சாகுபடி செய்ததில் விவசாயிகள் பாதிக்கப்பட்டதாக புகார் எழுந்தது. இதையடுத்து, விதை ஆய்வு துணை இயக்குநரான வி.சண்முகம் தலைமையில் அரசு அலுவலர்கள் விதை விற்பனை நிலையங்கள், பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் விவசாயியின் விளை நிலத்தையும் திடீர் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் மாவட்டத்தில் தரமற்ற விதைகள் விற்பனை செய்யப்படுவதில்லை எனத் தெரிய வந்தது. மேலும், தற்போதைய பருவத்துக்கான விதைகள், அரசு, தனியார் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளதாகவும், அரசின் அனுமதி பெற்ற விற்பனை மையங்களில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## "உழவர் மன்றங்கள் விவசாயிகளுக்கு அரணாக விளங்க வேண்டும்'

**புதுக்கோட்டை,**

உழவர் மன்றங்கள் விவசாயிகளுக்கு அரணாகச் செயல்பட வேண்டும் என்றார் நபார்டு வங்கி மேலாளர் எஸ். சோமசுந்தரம். புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியம் கங்கம்பட்டி, பெரம்பூர் ஆகிய கிராமங்களில்

நபார்டு உதவியுடன் புதன்கிழமை நடைபெற்ற உழவர் மன்றத் தொடக்க விழாவில் அவர் பேசியது:

உழவர் மன்றங்கள் அரசு திட்டங்களை கிராமத்திற்குள் கொண்டுச் சென்று அனைத்து மக்களையும் பயனடையச் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான விவசாய இடுபொருட்களான விதை, உரம், மருந்து, விவசாய கருவிகளை மொத்தமாகக் கொள்முதல் செய்து மக்களுக்கு தேவையான நேரத்தில் கிடைக்கச் செய்து அரணாகச் செயல்பட வேண்டும். அறுவடை செய்த உடனே விளைபொருட்களை விற்றுவிடாமல், அதை பாதுகாத்து கூட்டாக விற்பதன் மூலம் லாபத்தை அதிகரிக்க முடியும் என்றார்.

தொடர்ந்து உழவர் மன்றத்தினருக்கு கைத்தெளிப்பான் மற்றும் மரக்கன்றுகளை எஸ். சோமசுந்தரம் வழங்கினார். பி.ஆர்.எம் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சிக்கு பெரம்பூர் ஊராட்சித் தலைவர் வீரமுத்து தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில், கிள்ளனூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிச் செயலாளர் சண்முகம், ரோஸ் நிறுவன இயக்குநர் ஆதப்பன், ஜி.வி.என் நிறுவன இயக்குநர் சுப்பிரமணியன், கங்கம்பட்டி விழுதுகள் உழவர் மன்றத் தலைவர் சிவசங்கு, செயலாளர் கவுன்ராஜ், பெரம்பூர், வளத்தரப்பன் உழவர் மன்றத் தலைவர் மாரிமுத்து, செயலாளர் காத்தையா, பொருளாளர் முத்துச்சாமி, இயற்கை விவசாயி மாரியம்மாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக பி.ஆர்.எம் நிறுவன இயக்குநர் ஜீவானந்தம் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் செல்லத்துரை நன்றி கூறினார்.

## <u>இலவச கால்நடைகளுக்கு இன்றும், நாளையும் மருத்துவப் பரிசோதனை</u>

**திருநெல்வேலி,**

தமிழக அரசு வழங்கியுள்ள இலவச கறவை பசுக்கள், ஆடுகளுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் அந்தந்த கிராமங்களில் வெள்ளி, சனிக்கிழமைகளில் (மே 30, 31) நடைபெறுகிறது.

இதுதொடர்பாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மு. கருணாகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழக அரசின் இலவச கறவைப் பசுக்கள்

மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 3 நிதியாண்டுகளாக இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. 2013-14ஆம் ஆண்டில் 550 கறவைப் பசுக்களும், 23 ஆயிரத்து 292 ஆடுகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தமிழக அரசு வழங்கியுள்ள இலவச கறவைப் பசுக்கள், ஆடுகளுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் அந்தந்த கிராமங்களில் வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெறுகிறது. பசுக்களுக்கு இனப்பெருக்க பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்கமும் செய்யப்பட உள்ளன என செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தென்பெண்ணை நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை:கே.ஆர்.பி., அணை நீர்மட்டம் உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**



கிருஷ்ணகிரி:தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதிகளில், பெய்து வரும் கனமழையால், கே.ஆர்.பி., அணைக்கு, நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கர்நாடகா மாநிலம், நந்தி ஹில்ஸ் மலையில் உருவாகும் தென்பெண்ணை ஆறு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம்

மாவட்டம் வழியாக சென்று, கடலுாரில், வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது.தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கெலவரப்பள்ளி அணை, கே.ஆர்.பி., அணை ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், கர்நாடகா மாநிலம், தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியிலும், பரவலாக தொடர் மழை பெய்து வருவதால், இரு அணைகளுக்கும், நீர்வரத்து அதிகரித்து உள்ளது.நேற்று காலை நிலவரப்படி, கெலவரப்பள்ளி அணைக்கு, வினாடிக்கு, 280 கனஅடி நீர் வருகிறது. அணையின் மொத்த நீர்மட்டம், 44 அடி; இதில், தற்போது, 41 அடி நீர் இருப்பு உள்ளது. இதனால், அணையில் இருந்து, வினாடிக்கு, 280 கனஅடி நீர், தென்பெண்ணை ஆற்றில், திறந்து விடப்பட்டுள்ளது.

கெலவரப்பள்ளி அணையில் இருந்து, தண்ணீர் திறந்து விடப்பட்டதால், கே.ஆர்.பி., அணைக்கு, நீர்வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம், உயர்ந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, அணைக்கு, வினாடிக்கு, 102 கனஅடி நீர் வருகிறது. கே.ஆர்.பி., அணையின் மொத்த நீர்மட்டம், 52 அடி; தற்போது, அணையில், 35 அடி நீர் உள்ளது.தற்போது, இரண்டாம் போக, நெல் சாகுபடி முடிந்த நிலையில், பாசனத்துக்கு திறந்து விடப்படும், தண்ணீர் நிறுத்தப்பட்டு உள்ளது.

## கத்தரி வெயிலுக்குப்பின் மழையால் குளிர்ந்தது : மண்ணும், விவசாயிகள் மனமும்

**உடுமலை** : கொளுத்தி வந்த கோடை வெயிலுக்கு முற்றுப்புள்ளி வைக்க, நேற்றுமுன்தினம் உடுமலை பகுதியில், பரவலாக மழை பெய்தது. இதனால், காய்ந்து கிடந்த மண்ணும், விவசாயிகள் மனமும் குளிர்ந்தது. தென்மேற்கு பருவமழையும் போதுமான அளவு பெய்து, அணைகளுக்கு நீர் வரத்து கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. உடுமலை பகுதியில், கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை போதுமான அளவு பெய்யவில்லை. வறட்சியின் பிடியில் தவித்து வந்த இப்பகுதிக்கு, கடந்த சில வாரங்களுக்கு முன் வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மழை பெய்தது. இதனால், அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, குடிநீர் தட்டுப்பாடும் சற்று குறைந்தது. மழைக்கு பின் கத்தரி வெயில் கொளுத்த ஆரம்பித்து, மக்களை வாட்டியது. அதிக வெயில் காரணமாக விளைநிலங்களிலும் வறட்சி தொடர்ந்தது. தென்மேற்கு பருவமழை

குறித்த நேரத்தில் துவங்க வேண்டும் என விவசாயிகளும், கத்திரி வெயிலுக்கு முற்றுப்புள்ளிக்காக மக்களும் காத்திருந்தனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாலை உடுமலைப்பகுதியில் பரவலாக மழை பெய்தது. குளிர்ந்த காற்றுடன், பல மணி நேரம் சாரலாகவும், அரை மணி நேரத்திற்கும் மேலாக கனமழையும் பெய்தது. இதனால், உடுமலை நகரின் பல்வேறு வீதிகளில், வெள்ளம் பெருக்கெடுத்தது. கிராமப்புறங்களில் உள்ள மழை நீர் ஓடைகளில் தண்ணீர் நீண்ட இடைவெளிக்குப்பிறகு ஓடியது. மழையால், விவசாயிகளும், மக்களும் மகிழ்ச்சியடைந்தனர். நேற்று முன்தினம் உடுமலை நகரில், 59 மி.மீ., திருமூர்த்திமலையில் 13 மி.மீ., அமராவதியில் 5 மி.மீ., மழையளவு பதிவானது. மண் குளிர்ந்தது: உடுமலை பகுதியில் கடந்த 7 ம் தேதி 42 மி.மீ., 9 ம் தேதி 5.4 மி.மீ., 24 ம் தேதி 19.2 மி.மீ., மழை பெய்தது. மழைக்கு பின்னர், விவசாயிகள் கோடை உழவுப்பணிகளை மேற்கொண்டனர். தென்மேற்கு பருவமழையால், கிடைக்கும் தண்ணீரை அறுவடை செய்ய கோடை உழவு பயன்படுகிறது. மேலும், சமீபத்தில் பெய்த மழைக்கு பசுந்தீவன பயன்பாட்டிற்காக சோளம் உட்பட பயிர்களையும் விவசாயிகள் விதைப்பு செய்திருந்தனர். நேற்றுமுன்தினம் பெய்த மழையால், விதைப்பு செய்த பயிர்கள் எளிதாக முளைப்பதுடன், கோடை உழவு காரணமாக மண்ணும் குளிர்ந்துள்ளது.

'தேவை முன்னெச்சரிக்கை': உடுமலை பகுதியில் மழை நீர் வடிகால் அமைப்புகள் பல்வேறு இடங்களில் ஆக்கிரமிக்கப்பட்டும், முறையாக பராமரிக்கப்படாததாலும், தடுப்பணைகள், ஓடைகளுக்கு தண்ணீர் செல்லாமல், ரோட்டில் வீணாகச்செல்கிறது.

நேற்றுமுன்தினம் பெய்த மழைக்கு பல்வேறு இடங்களில் தண்ணீர் வீணாகச்சென்றது.

இந்த அவல நிலையை தடுக்க, மழை நீர் வடிகால்களை தூர்வாருவதுடன், மழை நீரை சேகரிக்கவும், உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை மற்றும் வேளாண்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால், தவமாய் தவமிருந்து பெற்ற மழை, யாருக்கும் பலனில்லாமல், வீணாகும் அவலம் ஏற்படும்.

**ஏற்காடு கோடை விழா ஜூன் 7ல் துவக்கம் : 25 வகையான 5 லட்சம் பூக்கள் தயார்**

வகையான மலர், ஐந்து லட்சம் எண்ணிக்கையில், பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுகின்றது. மூன்று அமைச்சர்கள், அரசுத்துறை செயலர்கள் விழாவில் பங்கேற்கின்றனர். சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், பல்வேறு வகையான கண்காட்சி, விளையாட்டு போட்டி நடத்தப்பட உள்ளது," என, சேலம் கலெக்டர் மகரபூஷணம் தெரிவித்தார்.

தமிழகத்தில், ஊட்டி, கொடைக்கானலுக்கு அடுத்தபடியாக, ஏற்காட்டுக்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்து செல்கின்றனர். 22 கொண்டை ஊசி வளைவுகளை கடந்து, மலைப்பாதையில் பயணம் செய்வதை, வெளிமாநில, மாவட்டத்தைச் சேர்ந்தோர் வெகுவாக ரசிப்பர். இங்கு, ஒவ்வொரு ஆண்டும், மே மாதத்தில், கோடை விழா நடத்தப்படும். 39வது கோடை விழா மலர் கண்காட்சி, ஜூன், 7, 8 தேதிகளில் நடக்க உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை, மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது.

சேலம் கலெக்டர் அலுவலகத்தில், இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நடந்தது. தோட்டக்கலைத்துறை சார்பில், 25 வகையான மலர், ஐந்து லட்சம் எண்ணிக்கையில் தயார்படுத்தப்பட்டுள்ளது. அந்த மலர்களைக் கொண்டு, விலங்குகளின் உருவம் தயார் செய்து பொதுமக்கள் பார்வைக்கு வைப்பர்.

மேலும், காண முடியாத பல மலர்களின் சங்கமத்தையும் அங்கு காணமுடியும். பழங்கள், காய்கறிகளால் ஆன உருவங்களும் கண்காட்சியில் இடம் பெறுகிறது. ஒவ்வொரு துறை சார்பிலும், ஸ்டால் அமைக்கப்படுகின்றன. விசேஷ நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. அதன்படி, ஊரக வளர்ச்சித்துறை, கோடை விழா நிகழ்ச்சிகளை கண்காணித்தல், மாநகர, மாவட்ட போலீஸார், போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

சமூக நலத்துறை, விளையாட்டு போட்டிகளை நடத்தி பரிசு வழங்குதல், குதிரையேற்றம் தொடர்பான பணி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சார்பில், கொழு கொழு குழந்தை போட்டி, பி.டி.ஓ.,க்கள், ஸ்டால்களையும், போட்டிகளையும் கண்காணிப்பது, வனத்துறை, மலையேறும் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல், அறநிலையத்துறை, சுற்றுலா பயணிகளுக்கு கோவில் விவரம் வழங்குதல், போக்குவரத்துத்துறை, சிறப்பு பஸ் வசதி செய்தல், உணவு

கட்டுப்பாட்டு துறை, காலாவதியான பொருட்களை அகற்றுதல், கால்நடைத்துறை, நாய் கண்காட்சி, சேலம் மாநகராட்சி லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கலெக்டர் சார்பில் அறிவுறுத்தப்பட்டது. துவக்க விழாவில், வேளாண்துறை, நெடுஞ்சாலைத்துறை, சுற்றுலாத்துறை அமைச்சர்களும், அரசு செயலர்களும் பங்கேற்கின்றனர். பிரபல திரைப்பட பின்னணி பாடகியர் கலந்து கொள்ளும் இசை நிகழ்ச்சியும், நாடகம், நடனம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளும் நடக்கிறது. சுற்றுலா பயணிகள் வருகையையொட்டி, ஏற்காடு மலைப்பாதை ஒருவழிப்பாதையாக மாற்றியமைக்கப்படுகிறது. போலீஸார் ரோந்து பணியில் ஈடுபட்டிருப்பர். பொதுமக்கள் எவ்வித இடையூறுமின்றி, மகிழ்ச்சியுடன் வந்து செல்லும் வகையில், போக்குவரத்து சீரமைக்கப்பட வேண்டும். சிறப்பு பஸ்கள் இயக்கப்பட வேண்டும் என, ஆலோசனைக் கூட்டத்தில் கலெக்டர் மகரபூஷணம் தெரிவித்தார். எஸ்.பி., சக்திவேல், துணை கமிஷனர் பிரபாகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

நான் புதியவன்; கலெக்டர்

ஏற்காடு கோடை விழா எப்போதும், மே மாத இறுதியில் நடத்தப்படுவது வழக்கம். ஆனால், லோக்சபா தேர்தல், கலெக்டர் இடமாற்றம் போன்றவற்றால், கோடை விழா தொடர்பாக அதிகாரிகளிடத்தில் எவ்வித ஆலோசனையும் நடத்தப்படவில்லை. மீண்டும் கலெக்டராக மகரபூஷணம் பொறுப்பேற்றவுடன், அது தொடர்பாக, சக அதிகாரிகளை அழைத்து ஆலோசனையில் ஈடுபட்டார். ஜூன், 7,8 தேதிகளில் நடத்துவதற்கு மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. கோடை விடுமுறைக்கு பின், கோடை விழா நடத்தப்படுவது குறித்து, கலெக்டரிடம், நிருபர்கள் கேட்டபோது, "" நான் புதியதாக பொறுப்பேற்றுள்ளேன். ஏற்கனவே இருந்த நிலை என்னவென்பது உங்களுக்கு தெரியாதா? கூட்டம் வரும் என எதிர்பார்க்கிறோம். அதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளோம்,'' என்றார்.

## குளங்களில் நீர்மட்டம் கண்காணிக்க அளவுகோல் : மழைநீரை தேக்கவும் நடவடிக்கை

**கோவை** : கோவையிலுள்ள குளங்களில் நீர்மட்டத்தை கண்காணிக்க, பொதுப்பணித்துறை சார்பில் அளவுகோல் பொருத்தப்பட்டுள்ளது.நொய்யல் நதி, தனது வழித்தடத்தில் 23 அணைக்கட்டுகளையும், இரண்டு அணைகளையும்

கொண்டுள்ளது. இதனால், 18 ஆயிரத்து 386 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. 159 கி.மீ., நீளம் கொண்ட நொய்யல் ஆறு, கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் 80.5 கி.மீ., பயணிக்கிறது. இந்த இரு மாவட்டத்திலும் 20 அணைக்கட்டுகளும், உஅ குளங்களும் உள்ளன.கோவை மாநகர எல்லைக்குள் உள்ள எட்டு குளங்கள் கூ0 ஆண்டு குத்தகைக்கு மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வளவு காலம், குளங்களில் நீர்மட்டத்தை கணக்கிட அளவுகோல் எதுவும் இல்லை. இந்நிலையில், குளங்களில் அளவுகோல் பொருத்தப்பட்டுள்ளது. குறிச்சி குளத்தில், தாழ்வான மட்டமுள்ள பகுதியில், ஐந்து மீட்டர் உயரமுள்ள அளவுகோல் நடப்பட்டுள்ளது. இதேபோன்று, நொய்யல் சார்ந்த குளங்கள் அனைத்திலும், அளவுகோல் நடப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.குளங்களின் நீர்மட்டத்தை கணக்கிட அளவுகோல் நடப்பட்டாலும், கடந்த மூன்று ஆண்டுகளாக மழை பெய்யாததால், குளங்கள் அனைத்தும் வறண்ட நிலையில் உள்ளன. ஒருசில குளங்களில், சாக்கடை கழிவு நீர்மட்டுமே தேங்கியுள்ளது. மழை பெய்து நொய்யலில் நீர் பெருக்கெடுத்தாலும், குளங்களுக்கு தண்ணீர் வந்தடைவது சந்தேகமாகவுள்ளது. குளங்களுக்கான நீர்வழிப்பாதையில், ஆக்கிரமிப்புகளும், புதரும் நிறைந்துள்ளதும், மதகு பகுதியில் மண் மேடு ஏற்பட்டு அடைப்பு உருவாகியுள்ளதும் முக்கிய காரணம்.

பொதுப்பணித்துறை உதவி கோட்ட பொறியாளர் குமாரசாமி கூறுகையில், "நொய்யல் படுகையிலுள்ள குளங்களில், நீர்மட்டத்தை அளவிடும் வகையில் அளவுகோல் இல்லை. பெங்களூருவிலுள்ள பொறியியல் ஆராய்ச்சி படிப்பு நிறுவன மாணவர்கள், நொய்யல் படுகையிலுள்ள குளங்களின் நீர்மட்டத்தை கணக்கிடும் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளனர்.

அதனால், குளங்களில் நீர்மட்டத்தை கணக்கிடும் அளவுகோல் நடப்பட்டுள்ளது. குளங்களுக்கு நொய்யல் தண்ணீர் வந்தடையும் வகையில் மதகு பகுதியில் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

ஆற்றில் மழை நீர் வரும் போது, குளங்களில் தேக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதன்பின், ஒவ்வொரு நாளும் குளங்களின் நீர்மட்ட அளவு பொதுப்பணித்துறையால், பராமரிக்கப்படும்," என்றார்.

## மீன்பிடி தடைக்காலம் முடிந்தது

மீன்பிடித் தடைக்காலம் முடிந்ததையொட்டி, விசைப்படகுகளில் மீனவர்கள் உற்சாகத்துடன், நேற்று மீன்பிடிக்கச் சென்றனர்.தமிழக கடல்பகுதியில் மீன்வளத்தைப் பெருக்க, ஏப்ரல், 15ம் தேதி துவங்கி, 45 நாட்கள் விசைப்படகுகள் மற்றும் இழுவலைப் படகுகள் மூலம் மீன்பிடிக்க, தமிழக அரசு தடை விதித்துள்ளது.தடைக்காலத்தில், 13 கடலோர மாவட்டங்களில், 10 லட்சம் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை. படகுகளையும், மீன்பிடி வலைகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தடைக்காலம், நேற்று முடிவடைந்ததையொட்டி மீனவர்கள் உற்சாகம் அடைந்தனர்.கடலோர பகுதிகளில், 45 நாட்களாக ஓய்ந்திருந்த ஐஸ் கட்டி உற்பத்தி நிலையங்கள் நேற்று முன்தினத்தில் இருந்து, சுறுசுறுப்பாக இயங்க துவங்கியுள்ளன. விசைப்படகுகளில், எரிபொருட்கள் மற்றும் ஐஸ் கட்டிகள் ஏற்றும் பணி நடந்தது.விசைப்படகுகள் கடலில் மீன்பிடிக்கச் செல்லுவதற்கான அனுமதி அட்டையை நேற்று மாலை, மீன்வளத்துறை மீனவர்களுக்கு வழங்கியது. இதையடுத்து, மீனவர்கள் கடலுக்கு சென்றனர்.

## முட்டை விலை 305 காசாக உயர்வு

**நாமக்கல்**:நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. கூட்டத்தில், கொள்முதல் விலையில், 295 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 10 காசு அதிகரித்து, 305 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 330; பெங்களூரு, 315; மைசூரு, 318; ஐதராபாத், 284; மும்பை, 323; விஜயவாடா, 279; கோல்கட்டா, 330; பர்வாலா, 282; டில்லி, 290. இவ்வாறு, நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

## இலவச ஆடு, மாடுகளுக்கு மருத்துவ முகாம்

**காஞ்சிபுரம்** : அரசு வழங்கிய இலவச ஆடு, மாடுகளுக்கு இன்றும், நாளையும் குடற்புழு நீக்கம் மற்றும் இனப்பெருக்க பரிசோதனை முகாம் நடைபெறுகிறது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில்

கூறியிருப்பதாவது: கடந்த மூன்றாண்டுகளில் அரசு வழங்கிய, வெள்ளாடு மற்றும் கறவை மாடுகளுக்கு இனப்பெருக்க பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க சிகிச்சையை, அரசு இலவசமாக நடத்தவுள்ளது. தமிழக அரசு மூலம் ஆடு மற்றும் மாடு பெற்ற பயனாளிகள் மட்டுமில்லாமல், அனைத்து கால்நடை விவசாயிகளும், இதில் கலந்து கொள்ளலாம். எனவே, இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்ட பகுதிகளில், இன்றும் மற்றும் நாளையும் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. மொத்தம், 268 இடங்களில் 88 குழுவினர் முகாமை நடத்துகின்றனர். கால்நடை விவசாயிகள் பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள்

**ஸ்ரீபெரும்புதுார்** : ஸ்ரீபெரும்புதுாரில், நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான திறன் ஆக்கப் பயிற்சி முகாமில், விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.ஸ்ரீபெரும்புதுார், பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை வளாகத்தில், கீழ்பாலாறு வடிநில கோட்ட நீர் வள, நில வளத் ஆதாரத்துறை சார்பில், நீரினை பயன்படுத்துவோர் சங்க உறுப்பினர்களுக்கான திறன் மேம்படுத்துதல் பயிற்சி முகாம் நடந்தது.

முகாமில், ஸ்ரீபெரும்புதுார், அழகூர், வல்லம், வடமங்கலம், மாம்பாக்கம், போந்துார், நாவலுார் கிராமங்களை சேர்ந்த ஏரி நீர்ப்பாசன விவசாயிகள், சங்க உறுப்பினர்கள், 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நீர் மேலாண்மை, பராமரித்தலும், பாசன அமைப்பின் புனரமைப்பு பணிகள், நீரின் முக்கியத்துவம், நீர் சேமித்தல், நீர் மாசு அடைவதை தடுத்தல், நீரின்றி வருங்காலத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து, காஞ்சிபுரம் நீர் வள, நில வள ஆதாரத் துறை கீழ்பாலாறு வடிநில உபகோட்ட உதவி செயற்பொறியாளர் ஜெகராஜ் விளக்கினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு, ஸ்ரீபெரும்புதுார் பொதுப்பணித்துறை (நீர் ஆதாரம் ) உதவி பொறியாளர் சம்பத், நேற்று முன்தினம், மரக்கன்றுகளை வழங்கினார்.

## உழவர் பயிற்சி நிலையத்தில் அலுவலர்களுக்கு பயிற்சி

**திண்டிவனம்**: திண்டிவனம் உழவர் பயிற்சி நிலையத்தில் எண்ணெய் பனை வளர்ச்சி திட்டத்தின் கீழ் அலுவலர்களுக்கு பயிற்சி முகாம் நடந்தது. முகாமில், விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், வேலூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 60 வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி மற்றும் களப்பயிற்சி அளிக்கப் பட்டது. நிகழ்ச்சிக்கு வேளாண் துணை இயக்குனர் ராஜாமணி தலைமை தாங்கினார். மத்திய திட்ட வேளாண் துணை இயக்குனர் ரத்தினசபாபதி, வேளாண் உதவி இயக்குனர் கென்னடிஜெபக்குமார், கோத்ரெஜ் அக்ரோவெட் மேலாளர் அசோகன், வேளாண் அலுவலர் ஜானகிராமன் உள்பட பலர் பேசினர். விட்டலாபுரத்தில் உள்ள எண்ணெய் பனை வயலுக்கு, அனைத்து அலுவலர்களை அழைத்துச் சென்று, களப்பயிற்சி வழங்கப்பட்டது. வேளாண் அலுவலர் வேதவல்லி நன்றி கூறினார்.

## கிளியனூர் ஏரி மதகுகள் கட்டுமான பணி "ஜரூர்'

**வானூர்**: கிளியனூர் பெரிய ஏரியில் மதகுகள் கட்டுமான பணி துரிதமாக நடந்து வருகிறது. வானூர் ஒன்றியம் கிளியனூரில் பொதுப்பணி துறைக்கு சொந்தமான பெரிய ஏரி உள்ளது. இந்த ஏரி பல ஆண்டுகளாக சீரமைக்கப்படாததால், மதகுகள் பலவீனமடைந்துள்ளது. மழை காலங்களில் ஏரியில் தேங்கும் மழைநீர் விரைவாக வெளியேறி விடுவகிறது. ஏரி தண்ணீர் இரண்டு மாதத்தில் வடிந்து விடுகிறது. இந்த ஏரியை நம்பி நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் இரண்டு போகம் நெல் பயிர் செய்த விவசாயிகள், தற்போது மதகும் சரியில்லாத காரணத்தால் ஒரு போகம் பயிரிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் பொதுப்பணி துறையினர் மூலம் மதகுகள் கட்டும் பணி, ஏரி நீர்பிடிப்பு நடுபகுதியில் நீரை தேக்க பள்ளம் தோண்டும் பணி துரிதமாக நடந்து வருகிறது.

## வடமாநிலங்களில் அதிக பரப்பில் சாகுபடி ஈரோடு மஞ்சளுக்கு விற்பனை சரிவு

**ஈரோடு**: வடமாநிலங்களில், அதிக சாகுபடி அதிகரித்தால், ஈரோடு மஞ்சளுக்கு கிராக்கி குறைந்து, குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரை சரிந்துள்ளது. மகராஷ்டிரா, சாங்லி சந்தைக்கு, கடந்த சில நாட்களாக, மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளது.

இதனால், தமிழகத்துக்கான வடமாநில ஆர்டர்கள் வெகுவாக குறைந்துவிட்டது. இதனால், ஈரோடு மார்க்கெட்டில், மஞ்சள் விலை, கடந்த ஒரு வாரத்தில், 500 ரூபாய் வரை சரிந்துள்ளது. ஈரோட்டில், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் உள்பட, மொத்தம், நான்கு இடங்களில், மஞ்சள் சந்தை நடந்து வருகிறது. ஈரோடு மஞ்சள், சேலம் மஞ்சள், மினிசேலம், பி.டி.எஸ்-10, எட்டாம் நெம்பர் உள்பட, மஞ்சள் விரலியில் பல்வேறு ரகங்கள் உள்ளன. வடமாநில வியாபாரிகள் தமிழகம், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட, பல்வேறு பகுதிகளில் கொள்முதல் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது வழக்கம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, ஐதராபாத், நிஜாமாபாத் மற்றும் மகராஷ்டிராவின் சாங்லி பகுதிகளுக்கு, அதிகளவில் ஆர்டர்கள் செல்கின்றன. ஈரோட்டில், கடந்த வாரத்துக்கு முன்புவரை குறைந்திருந்த மஞ்சள் விலை, 6,700 ரூபாயில் இருந்து, அதிகப்பட்சமாக, 7,900 ரூபாய் வரை உயர்ந்தது. தற்போது, சாங்லி சந்தைக்கு வரத்து அதிகரித்துள்ளதால், வடமாநில வியாபாரிகளின் ஏற்றுமதி ஆர்டர்களுக்கு, தேவையான அளவு மஞ்சள் கிடைப்பதால், தமிழகத்தில் இருந்து குறைந்தளவே வாங்குகின்றனர். இதனால், பத்து நாட்களுக்குள் விலை ஏறக்குறைய, 500 ரூபாய் வரை குறைந்து விட்டது. வடமாநிலங்களில், வரத்து குறைந்தால், ஜூன் மாதத்துக்கு பின்பு, விலை அதிகரிக்க கூடிய வாய்ப்பு உள்ளது, என்று, இந்திய மஞ்சள் உற்பத்தியாளர் சங்க செயலாளர் நஞ்சப்பன் கூறினார்.

## ஈரோட்டில் அதிகபட்ச மழை பதிவு

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், நேற்று முன்தினம் பெய்த மழையில், ஈரோட்டில் அதிகபட்ச அளவு பதிவானது. மே, நான்காம் தேதி அக்னி நட்சத்திர வெயில் துவங்கியது. வங்க கடலில் ஏற்பட்ட புயல் சின்னத்துடன், அக்னி நட்சத்திரம் துவங்கியதும், ஓரிரு நாட்கள் மழை பெய்தது. மழை பெய்த நாட்களில் மட்டும், குளிர்ச்சியான வானிலை நிலவியது. அதன் பின், அக்னி வெயில் சுட்டெரித்தது. இருப்பினும் அவ்வப்போது, பெய்த மழை, ஆறுதலாக அமைந்தது. இந்நிலையில், அக்னி நட்சத்திர நிறைவு நாளான, நேற்று முன்தினம், திடீரென மாலை, நான்கு மணியளவில், மழை பெய்ய துவங்கியது. மாநகரில் மட்டுமின்றி, மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதில், ஈரோட்டில் அதிகபட்சமாக, 46 மி.மீ., மழையளவு பதிவாகி உள்ளது. பவானிசாகர், 2.8 மி.மீ., ஒரத்துபாளையம், 6,

சத்தியமங்கலம், 10, கோபி, 1.4, எலந்தகுட்டைமேடு, 6.8, கவுந்தப்பாடி, 4, பவானி, 5.2, கொடுமுடி, 11, ஒலப்பாளையம், 18, புங்கம்பாடி, 3.6, மொடக்குறிச்சி, 2.3, சென்னிமலை, 1, சிவகிரி, 1, முத்துார், 4 மி.மீ., என, மழை பதிவானது. இம்மழையால், நேற்று அதிகாலை வரை குளிர்ந்த வானிலை காணப்பட்டது.

## ஆனைமலையில் கொப்பரை ஏலம்

**ஆனைமலை** : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில், எதிர்பார்த்த விலை கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். ஆனைமலையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கம்பாலபட்டி, கரியாஞ்செட்டி பாளையம், ஜல்லிபட்டி, ரமணமுதலிபுதுார், ஆழியார், அங்கலக்குறிச்சி, காளியபுரம், சேத்துமடை, வேட்டைக்காரன்புதுார் பகுதிகளில் இருந்து விவசாயிகள் கொப்பரை பருப்புகளை கொண்டு வருவது வழக்கம். நேற்றுமுன்தினம் நடந்த ஏலத்திற்கு 120 விவசாயிகள் 243 மூட்டை கொப்பரை பருப்புகளை கொண்டு வந்திருந்தனர். ஏலம் விடுவதற்காக கொப்பரை தரம் பிரிக்கப்பட்டது. இதில் முதல் தர கொப்பரையாக 150 மூட்டைகளும், இரண்டாம் தர கொப்பரையாக 93 மூட்டைகளும் கிடைத்தது. முதல் தர கொப்பரை குறைந்தப்பட்ச விலையாக 97.25 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 100.75 ரூபாய்க்கும் விற்பனையானது. இரண்டாம் தர கொப்பரை ஏலம் விடப்பட்டதில், குறைந்தபட்ச விலையாக 77.15 ரூபாய்க்கும் அதிகபட்ச விலையாக 96.15 ரூபாய்க்கும் விற்பனையானது. ஏலத்தில் 120 விவசாயிகளும், 2 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப வேளாண் துறையில் தொடரும் ஆய்வுகள்

**ஊட்டி** : "தேசிய அளவில், காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப, வேளாண் துறையில் மாற்றங்களை செய்வது தொடர்பான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன' என, தெரிவிக்கப்பட்டது.

ஊட்டியில் உள்ள மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு ஆராய்ச்சி, பயிற்சி மையம் சார்பில், நீர் பிடிப்பு பகுதிகளில் பொறியியல் கட்டமைப்பு தொடர்பாக, தென் மாநில அளவிலான 6 நாள் பயிற்சிமுகாம், ஊட்டியில் நடந்தது. மைய

தலைவர் டாக்டர் கோலா வரவேற்றார். நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, மாநில வேளாண் பொறியியல் துறை நதி நீர் பள்ளதாக்கு திட்ட முதன்மை பொறியாளர் ராமகிருஷ்ணன் பேசுகையில்,""நதி நீர் பள்ளதாக்கு திட்டத்தை முதன் முதலில் நீலகிரி மாவட்டத்தில் தான் அறிமுகம் செய்தோம். தற்போது மதுரை,தேனி மாவட்டங்களை கடந்து, தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறோம்," என்றார்.

சிறப்பு திட்டம் மத்திய திட்ட கமிஷனின் மழை முகடு பகுதி ஆணைய தொழில்நுட்ப ஆலோசகர் டாக்டர் சிக்கா, சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசுகையில்,""இயற்கை வேளாண்மையை அதிகப்படுத்த. மண், நீர் வள பாதுகாப்பு மிக முக்கியம். தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தால், மழை பெய்யும் நாட்களின் அளவு குறையும்; மாறாக, மழை பெய்யும் அடர்த்தி அதிகரிக்கும். எனவே, விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகளை அமைக்க வேண்டும். தேசிய அளவில், காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப, வேளாண் துறையில் மாற்றங்களை செய்வது தொடர்பான ஆய்வுகள் நடத்தப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

நாட்டில், விவசாயம், நீர் மேலாண்மை, வேளாண் பொறியியல் துறை என, முக்கியமான 8 துறைகளை மேம்படுத்துவது குறித்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தமிழகம், கேரளா, கர்நாடக மாநிலங்களை உள்ளடக்கிய நீலகிரி உயிர் சூழல் மண்டலத்தில் மண் மற்றும் நீர் வளத்தை பாதுகாக்க வேண்டும்," என்றார். இக்கருத்தரங்கில் ஆந்திரா, கர்நாடகா, தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களைச் சேர்ந்த, வேளாண் பொறியியல், விவசாயம், ஊரக வளர்ச்சி உட்பட பல்வேறு துறைகளை சேர்ந்த பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், உதவி இயக்குனர்கள் என, 28 பேர் பங்கேற்றுள்ளனர்.ஊட்டி மத்திய மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு மைய முதன்மை விஞ்ஞானி டாக்டர் மணிவண்ணன் நன்றி கூறினார்.

## வேளாண் விளை பொருட்களை எடுத்து செல்லும் வியாபாரிகள் செஸ் வரி செலுத்த அறிவுரை

**ஊட்டி** : "வேளாண் விளை பொருட்களை விற்பனைக்காக எடுத்து செல்லும் வியாபாரிகள் "செஸ்' வரி செலுத்த வேண்டும் ' என, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரிமாவட்ட கலெக்டர் சங்கர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நீலகிரி மாவட்டத்தில் 8000 எக்டருக்கும் அதிகமான நிலப்பரப்பில் கேரட், உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட்ரூட், முட்டைகோஸ், காலிபிளவர், பூண்டு, வாழை, ஏலக்காய், இஞ்சி, ஆரஞ்சு, நூல்கோல் மற்றும் இதர காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மட்டும் அல்லாமல், பிற மாநிலங்களுக்கும் எடுத்து செல்லப்படுகிறது.

வேளாண் விளை பொருட்களை பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களுக்கு எடுத்து செல்லும் வியாபாரிகள், தாங்கள் கொண்டு செல்லும் மொத்த காய்கறிகள் மதிப்பு தொகையில் ஒரு சதவீதம் வேளாண்மை விற்பனைக் குழுவுக்கு மேல் வரியாக (செஸ்) செலுத்த வேண்டும்.

ஊட்டி சேரிங்கிராஸ் பகுதியல் உள்ள வேளாண் விற்பனைக்குழு அலுவலகத்தில் (என்.சி.எம்.எஸ்), வியாபாரிகள் அனைவரும் வரி (செஸ்) செலுத்தி, ரசீதுடன் காய்கறிகளை எடுத்து செல்லலாம். வாகன சோதனையின் போது, வரி செலுத்தாத வியாபாரிகள்

மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் நீலகிரி மாவட்டத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்ய மேல் வரி (செஸ்) செலுத்த தேவையில்லை. ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூரில் உள்ள உழவர் சந்தைகளுக்கு சென்று, அந்தந்த பகுதி விவசாயிகள் மேல் வரிக்கான, இலவச அனுமதி சீட்டுகளை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் சங்கர் கூறியுள்ளார்.

## இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**திருச்சி**: லோக்சபா தேர்தலால், இரண்டு மாதத்துக்கு பின், இன்று காலை, 11 மணிக்கு வேளாண் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், மாதந்தோறும் கடைசி வெள்ளிக்கிழமை, வேளாண் குறைதீர் கூட்டம், கலெக்டர் தலைமையில் நடைபெறும். லோக்சபா தேர்தல் அறிவிப்பு வெளியானதை அடுத்து, ஏப்ரல், மார்ச், ஏப்ரல் மாதத்தில் நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம், தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தேர்தல் முடிந்ததை அடுத்து, இன்று காலை, 11 மணிக்கு திருச்சி கலெக்டர் அலுவலகத்தில்,

வேளாண் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது. ஏற்கனவே, வறட்சி நிவாரணம் வழங்கியதில் முறைகேடு, கூட்டுறவு கடன் சங்கத்தில் முறைகேடு போன்ற புகார்கள் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள நிலையில், இன்று நடக்கும் வேளாண் குறைதீர் கூட்டத்தில், காரசாரம் விவதம் இருக்கும், என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க அறிவுரை

**பெரம்பலூர்**: பெரம்பலூர் மாவட்டத்தில், 2011-12ம் ஆண்டு, 17 ஊராட்சிகளில், 954 பயனாளிகளுக்கு, ஒரு கோடியே, 21 லட்சம் ரூபாய் மதிப்பில், 3,816 வெள்ளாடுகளும், 2012- 13ம் ஆண்டில், இரண்டு கோடியே, 44 லட்சம் ரூபாய் மதிப்பில், 1,916 பயனாளிகளுக்கு, 24 ஊராட்சிகளில் 7,664 ஆடுகளும், 2013-14ம் ஆண்டில், 31 ஊராட்சிகளில், 1,875 பயனாளிகளுக்கு, இரண்டு கோடியே, 44 லட்சம் ரூபாய் மதிப்பில், 7,500 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா வெள்ளாடுகள் மூலம் பயன்பெற்ற பயனாளிகள், கால்நடைகளை பராமரிப்பதற்காக, ஆடுகள் வழங்கும் ஒரு வாரத்திற்கு முன்பும், வழங்கப்பட்ட, 10 மற்றும், 30வது நாளில் தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலை கழக பயிற்சி மையத்தால், பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி காலத்தில் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது. மேலும், ஆடுகள் பெற்ற பயனாளிகளின் இருப்பிடம், கால்நடை மருந்தகங்களுக்கு தொலைவில் இருந்தால், அங்கு நேரிடையாக சென்று, ஆடுகளை சோதனை செய்கின்றனர்.

நோயுள்ள ஆடுகளுக்கு சிகிச்சை, ஆடுகள் எண்ணிக்கை ஆய்வு செய்தல் மற்றும் குடற்புழுக்களால் ஆடுகளுக்கு ஏற்படும் இழப்பை தவிர்த்து உடல் எடையை அதிகரித்து, அதிகப்படியான லாபம் பெறுவதற்காக, மாதம் ஒருமுறை இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

எனவே, இத்திட்டத்தில் பயனடைந்த, பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள், மே, 31ல் நடக்கும் முகாமில், ஆடுகளுக்கு சிகிச்சை அளித்து, ஆடுகளின் உடல் எடையை அதிகரித்துக் கொள்ளலாம் என பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.

## புதுகை மாவட்ட வங்கிகளுக்கு ரூ. 2,347 கோடி கடன் இலக்கு

**புதுக்கோட்டை**: புதுக்கோட்டை மாவட்டத்தில், நடப்பாண்டு (2014-15) விவசாயம் மற்றும் சிறு தொழில்களுக்கு கடன் வழங்க வங்கிகளுக்கு, 2,347 கோடியே, 91 லட்சம் ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான வங்கி அதிகாரிகள் கூட்டம், கலெக்டர் மனோகரன் தலைமையில் நடந்தது. திட்ட இயக்குனர் சந்தோஷ்குமார், ஐ.ஓ.பி., மண்டல மேலாளர் வெங்கட்ராமன், முன்னோடி வங்கி மேலாளர் ராமசாமி, ரிசர்வ் வங்கி உதவி பொதுமேலாளர் பாலு உட்பட. வங்கி அதிகாரிகள் பலர் பங்கேற்றனர். புதுக்கோட்டை மாவட்டத்தில். நடப்பாண்டில், 2,347 கோடியே. 91 லட்சம் ரூபாய் கடன் வழங்க வங்கிகளுக்கு, மாவட்ட நிர்வாகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில், விவசாயம் மற்றும் அதை சார்ந்த தொழில்களுக்கு, 2,102 கோடியே, 40 லட்சம் ரூபாய் கடன் வழங்க வேண்டும். சிறு மற்றும் குறு தொழில்களுக்கு, 86 கோடியே, 82 லட்சம் ரூபாய், இதர தொழில்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், 158 கோடியே, 69 லட்சம் ரூபாய் கடன் வழங்கவேண்டும், என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், கடன் வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, தாமதமின்றி கடன் வழங்க வங்கி மேலாளர்கள் அனைவரும் முன்வரவேண்டும், என கலெக்டர் மனோகரன் வேண்டுகோள் விடுத்தார்.

## கோடை மழை: விவசாயிகள் நம்பிக்கை

**திண்டுக்கல்** : மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பெய்த கோடை மழையை விட, நடப்பு ஆண்டில் கூடுதலாக மழை பெய்திருப்பது விவசாயிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மாவட்டத்தின் சராசரி அளவு 836 மி.மீ. 2010 ல் 1104 மி.மீ., 2011 ல் 1070 மி.மீ., மழையும் அதிகபட்சமாக பெய்துள்ளது. அதன் பின் மழை அளவு பாதியாக குறைந்தது. 2012 ல் 519 மி.மீ., 2013 ல் 450 மி.மீ., மழை மட்டுமே பெய்தது. சராசரியை விட மிக குறைவாக பெய்த மழையால் மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. தென்னை உட்பட அனைத்து மரங்களும் கருகின. விவசாயிகள் பயிர் செய்ய முடியவில்லை. நிலத்தடி நீர் மட்டம் 1500 அடிக்கும் கீழே சென்றது. மின் மோட்டார் மூலமும் தண்ணீர் பெறமுடியாத நிலை இருந்தது. தற்போது, நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு

நம்பிக்கை அளிக்கும் வகையில் இந்த ஆண்டு துவக்கமான ஜனவரியிலிருந்து மே வரை 185 மி.மீ., மழை பெய்துள்ளது. கோடை மழை நம்பிக்கைதரும் வகையில் இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தொடர்ந்து தென் மேற்கு மற்றும் வட கிழக்கு பருவ மழையும் இந்த ஆண்டு ஏமாற்றாமல் பெய்யும் என்ற எதிர்பார்ப்பால், குறுவை சாகுபடி பணியை விவசாயிகள் துவக்கியுள்ளனர்.

## நகை கடனுக்கு கால அவகாசம் விவசாயிகள் நலன் காக்க முடிவு

**திண்டுக்கல்** : வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலன் கருதி, கூட்டுறவு சங்கங்களிலிருந்து பெற்ற நகை கடன்களுக்கான தொகையை திருப்பி செலுத்துவதில் கால அவகாசம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக விளைபொருள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. சாகுபடிக்கு முன்னதாக தேவைப்படும் முதலீட்டிற்காக விவசாயிகளில் பலர், நகைகளை அடகு வைத்து கூட்டுறவு சங்கங்களில் பணம் கடன் பெற்றிருந்தனர். எதிர்பார்த்த மழை பெய்யாததால், வருவாய் ஈட்ட முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இந்நிலையில், அடகு வைத்த நகைகளை ஏலம் விடப்போவதாக கூட்டுறவு சங்கங்களில் இருந்து விவசாயிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இதனால், விரக்தியடைந்த விவசாயிகள் கால அவகாசம் அளிக்குமாறு கலெக்டர் வெங்கடாசலத்திடம் வேண்டுகோள் விடுத்தனர். கூட்டுறவு சங்க அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்திய கலெக்டர், குறுகிய கால கடன்களை மத்திய கால கடனாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலன் கருதி, நகை கடனுக்கு கால அவகாசம் அளிக்குமாறு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

## மஞ்சளாறில் 44 மி.மீ.,மழை

**தேனி** : கோடையின் உச்சமான, அக்னி நட்சத்திரம் முடிவு நாளான நேற்று முன்தினம் பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்தது, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. மழையுடன், கத்திரி வெயில் நிறைவடைந்தது.நேற்று பதிவான மழை அளவு (மி.மீ.):

ஆண்டிபட்டி 3, அரண்மனைபுதூர் 19.6, போடி 4.8, கூடலூர் 18, மஞ்சளாறு 44, பெரியகுளம் 4, பெரியாறு 13.2, சோத்துப்பாறை 3, தேக்கடி 1.2, உத்தமபாளையம் 32, வைகை அணை 32. அதிகபட்சமாக மஞ்சாளாறு பகுதியில் 44 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

## மேகமலையில் கனமழை பெய்வதால் சண்முகாநதி நீர் மட்டம் உயர வாய்ப்பு

**கம்பம்** : மேகமலை பகுதியில் கனமழை பெய்து வருவதால், சண்முகா நதி அணையின் நீர் மட்டம் விரைவில் உயர வாய்ப்பிருப்பதாக, பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். தற்போதுஅணை நீர் மட்டம் 43 அடியாக உள்ளது. தேனி மாவட்டத்தில் சோத்துப்பாறை, வைகை. மஞ்சளாறு, சண்முகாநதி அணைகள் உள்ளன. முல்லைப் பெரியாறு கேரள மாநிலத்திற்குள் இருந்தாலும், தமிழகத்திடம் உரிமை இருப்பதால், பெரும்பாலான சாகுபடி நிலங்கள் முல்லைப் பெரியாற்றை நம்பியே உள்ளன. சண்முகா நதி அணை, கடந்த 2002ல் மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்., கட்டியது. இந்த அணையால் ஓடைப்பட்டி, கன்னிசேர்வைபட்டி, ஆனைமலையன்பட்டி, ராயப்பன்பட்டி,எரசை, சின்னஓவுலாபுரம் உள்ளிட்ட பல கிராமங்கள் பயன்பெறுகின்றன. 1,640 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அணையின் முழு கொள்ளளவு 52 அடி. 26 அடிக்கு மேல் தான் தண்ணீர் எடுக்க முடியும். ஆண்டுதோறும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தண்ணீர் திறப்பது வழக்கம். விநாடிக்கு 14 கனஅடி திறக்கப்படும். 120 நாட்களுக்கு தண்ணீர் திறப்பார்கள். இந்த தண்ணீரை பயன்படுத்தி தோட்ட விவசாயம் நடைபெறும். கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் உயரவும் பயன்படும். கடந்த 2012 ல் நவம்பர் முதல் வாரம் திறக்கப்பட்டது. 2013 ல் டிசம்பர் மாதம் வரை சண்முகா நதி அணை திறக்கப்படவில்லை. தற்போது மேகமலை பகுதியில் நல்ல மழை பெய்து வருகிறது. சண்முகா நதி அணைக்கு நீர்வரத்து மேகமலை பகுதியை நம்பியே உள்ளது. பொதுப்பணித்துறையினர் கூறியதாவது:

அணையின் நீர் மட்டம், தற்போது 43 அடியாக உள்ளது. முழு கொள்ளளவான 52 அடியை எட்டும் போது, தண்ணீர் திறக்கப்படும். தற்போது மேகமலை பகுதியில் நல்ல மழை பெய்து வருவதால், அணை நீர் மட்டம் உயர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. மேலும் தென்மேற்கு பருவமழையும் பெய்வதற்கான அறிகுறிகள் தெரியத்

துவங்கியுள்ளன. எனவே அணையின் நீர் மட்டம் முன்கூட்டியே உயர்வதற்கு வாய்ப்பு உள்ளது, என்றனர்.

## விவசாயிகள் கவனத்திற்கு

**ராமநாதபுரம்** : ராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமாறன் கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு, தனியார் நெல் விதை, தானிய விற்பனை நிலையங்கள் விநியோக உரிமம் பெற்றுள்ளதா என்பதை விவசாயிகள் கவனிக்க வேண்டும். சான்று அட்டை, விபர அட்டை பொருத்தப்பட்டுள்ளதா என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். விதைக்கும் பருவத்திற்குரிய விதை வாங்கி சாகுபடி செய்ய வேண்டும். காலாவதி நாள், குவியல் எண்ணை சரிபார்த்து பட்டியல் பெற்ற பின், விதைகளை வாங்க வேண்டும். விதைகளின் முளைப்பு திறன், புறச்சுத்தம், இனச்சுத்தம் விபரங்களை தெரிந்த பின்பே, விதைக்க வேண்டும். முளைப்பு திறனறிய விதை மாதிரியில், 100 கிராமை துணிப்பையில் எடுத்து பயிர் ரகம் உள்ளிட்ட விபரங்களை, பரமக்குடி விதை பரிசோதனை நிலையத்தில் ரூ.30 செலுத்தி சோதனை செய்து விதைக்கலாம். 80 சதவீதம் முளைப்பு திறனுள்ள நெல் விதையை விதைக்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி உள்ளார்.

## உரம் உற்பத்தியாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

**ராமநாதபுரம்** : ராமநாதபுரம் வேளாண் துறை அலுவலகத்தில் உரம் உற்பத்தியாளர்கள் மற்றும் மொத்த உர விற்பனையாளர்கள் ஆலோசனை கூட்டம் நடந்தது.விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமாறன் தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) ஷேக் அப்துல்லா முன்னிலை வகித்தார். நடப்பாண்டு 45,000 மெட்ரிக் டன் உரம் தேவைப்படுகிறது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா- 801 மெட்ரிக் டன், தனியார் உரக்கடைகளில் 1,462 மெட்ரிக் டன் என, மொத்தம் 2,263 மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடை களில் மொத்தம் 993 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரம் தயார் நிலையில் உள்ளது. வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு)ஷேக்

அப்துல்லா கூறியதாவது: அதிகரித்து வரும் உரச்செலவை குறைக்க சரியான உரங்களை தேர்வு செய்து, அவற்றை முறையாக பயன்படுத்துவதின் மூலம் அதிக லாபம் அடையலாம். இதற்காக, "சூப்பர் பாஸ்பேட்' உரத்தை பயன்படுத்த, விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறோம், என்றார்.

## மீன்பிடிக்க இலங்கை கரைக்கு செல்ல வேண்டாம்: மீனவர்களுக்கு அறிவுரை

**ராமேஸ்வரம்** : "இலங்கை மீனவர்களுக்கு இடையூறாக, அந்நாட்டு கரை வரை மீன்பிடிக்க செல்ல வேண்டாம்' என, ராமேஸ்வரம் மீனவர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.கடந்த ஏப்., 15 முதல் 45 நாள்கள் தடை காலத்திற்கு பிறகு, நாளை, ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல உள்ளனர். இந்நிலையில், ராமேஸ்வரத்தில் மீனவர் சங்க தலைவர் போஸ் தலைமையில், மீனவர்களின் ஆலோசனை கூட்டம் நடந்தது. கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக, இலங்கை சிறையில் வாடிய தமிழக மீனவர்களை விடுவிக்க செய்த, பிரதமர் மோடி, இலங்கை அதிபர் ராஜபக்ஷே மற்றும் சிறையில் வாடிய மீனவர்கள் குடும்பத்திற்கு நிதியுதவி செய்து, மீனவர்களை சட்டரீதியாக விடுவிக்க நடவடிக்கை எடுத்த, முதல்வர் ஜெ.,வுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலையில் மீன்பிடிக்க கூடாது, மீறினால் படகை பறிமுதல் செய்து, படகு உரிமையாளர்கள், மீனவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க, போலீசாருக்கு பரிந்துரைப்பது. இலங்கை மீனவர்களுக்கு இடையூறாகவோ, அவர்களது வலைகளை சேதப்படுத்தும் வகையில், இலங்கை கரையில் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## காரியாபட்டியில் 98.80 மி.மீ., மழை

விருதுநகர் : அக்னி நட்சத்திரத்தின் நிறைவு நாளான, நேற்றுமுன்தினம் மாலை, விருதுநகர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. தாழ்வான பகுதிகள், சாலைகளை நீர் சூழ்ந்தது. நேற்று காலை 8.30 மணிப்படி, மாவட்டத்தில் அதிகபட்சமாக, காரியாபட்டியில் 98.80 மி.மீ., மழை பதிவானது. அருப்புக்கோட்டை 64.40 , கோவிலாங்குளம் 58.20, விருதுநகர் 47.40, பிளவக்கல் 45, வத்திராயிருப்பு 33, திருச்சுழியில் 14.30 மி.மீ., பதிவானது. பூமி குளிர்ந்து, வெப்பம் தணிந்ததால், மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தண்ணீர் திறக்க ஜெயலலிதா உத்தரவு

குமரி பேச்சிப்பாறை பெருஞ்சாணி, சித்தார் -1, 2 அணைகளில் நீர் திறக்க ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். கோதையாறு, பட்டணங்கால் பாசனத்துக்கு ஜூன் 1 முதல் நீர் திறக்க முதல்வர் ஆணையிட்டுள்ளார் . பெரியாறு அணையில் இருந்து இருபோக ஆயக்கட்டு பாசனத்துக்கு நீர் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது. நீர் திறப்பால் குமரியில் 79 ஆயிரம் ஏக்கரும், தேனியில் 14 ஆயிரம் ஏக்கரும் பாசன வசதி பெறும்.

### 45 நாட்கள் மீன்பிடி தடை காலம் முடிந்தது விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு புறப்பட்டனர்



**நாகை**: மீன் பிடிப்பதற்கு தடைகாலம் முடிந்ததால் விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்ல துவங்கினர். தமிழக அரசு சார்பில், மீன்களின் இனப்பெருக்க காலத்தை முன்னிட்டு கடந்த ஏப்ரல் 15ம் தேதி முதல் மே 29ம் தேதி (நேற்று) வரை ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்க தடைவிதிக்கப்பட்டது. ஆனால், பைபர் மற்றும் கட்டுமர மீனவர்கள் மட்டும் 30 கடல் மைல் தூரத்திற்குள் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதனால், கணவாய், கொடுவாய், கத்தாழை, வஞ்சிரம் உள்ளிட்ட மீன்வகைகளின் ஏற்றுமதியில் கோடிக்கணக்கில் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுதவிர, இறால், நண்டு மற்றும் மீன்களின் விலை உயர்ந்தது.

இந்தநிலையில், 45 நாள் தடைக்காலம் நேற்று நள்ளிரவுடன் முடிந்தது. அதைதொடர்ந்து, தமிழகம் முழுவதும் விசைப்படகு மீனவர்கள் நேற்று நள்ளிரவு முதல் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல துவங்கினர். இன்னும் ஓரிரு நாட்களில் மீன்வரத்து வழக்கம்போல் வரும். மீன்களின் விலையும் குறையும். தஞ்சை மாவட்ட விசைப்படகு மீனவ சங்கத்தலைவர் ராஜமாணிக்கம் கூறியதாவது: நேற்று நள்ளிரவுடன் அரசு விதித்த மீன்பிடி தடைகாலம் நிறைவடைகிறது. இருப்பினும் நாட்டுப்படகிற்கும், விசைப்படகிற்கும் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி விசைப்படகு கடலுக்கு செல்லக்கூடிய திங்கள், புதன், சனி என்ற ஒப்பந்தத்தின்படி இன்று (வெள்ளி) என்பதால், நாளை (சனி) 31ம் தேதி முதல் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல உள்ளோம். தமிழக அரசு, படகு ஒன்றிற்கு மாதந்தோறும் 1500 லிட்டர் மானிய டீசல் வழங்கி வருகிறது. அந்த டீசலை வரும் 10ம் தேதி முதலே வழங்க உள்ளனர். 45 நாட்கள் மீன்பிடி தொழில் இல்லாமலும், லட்சக்கணக்கில் செலவு செய்து படகுகளை மராமத்து செய்து மிகவும் கஷ்டத்தில் உள்ள மீனவர்கள் கடலுக்குச் செல்ல மானியம் இல்லாமல் டீசல் நிரப்பி செல் வது மிகவும் கஷ்டமான ஒன்று. எனவே அரசு வழங்கக்கூடிய மானிய டீசலை 31ம் தேதி (நாளை) முதல் நாளே வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மீன் வளத்தை அதிகரிக்க கன்னியாகுமரி கடலில் செயற்கை பவளப்பாறைகள்</u>



**கன்னியாகுமரி**: கன்னியாகுமரி கடலில் மீன் வளத்தை அதிகரிக்க செய்வதற்காக செயற்கை பவள பாறைகளை கடலில் போடும் பணி நடந்தது.கடலில் மீன்

வளத்தை பெருக்குவதில் பவளப்பாறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பவளப் பாறைகளில் படியும் பாசிகளில் இருக்கும் ஒட்டுண்ணிகளை உண்ண வரும் மீன்கள் இந்த பாறைகளின் இடைவெளிகளில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்றன.

மன்னார் வளைகுடா பகுதியில் பவளப்பாறைகள் அதிகமாக காணப்படுகின்றன. மற்ற பகுதிகளில் பவளப்பாறைகள் குறைந்த அளவே காணப்படுகின்றன. இதையொட்டி, தமிழகத்தின் 6 மாவட்டங்களில் செயற்கை பவளப் பாறை களை கடலில் போட்டு மீன் வளத்தை அதிகரிக்க செய்ய திட்டமிடப்பட்டது. அதைத்தொடர்ந்து, மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி மையம், பன்னாட்டு நிதி உதவியுடன் விவசாய மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து இப்பணியை செய்து வருகிறது.

இந்த திட்டம் 1.25 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், நாகை, கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் செயற்கை பவளப்பாறை களை கடலில் போடும் பணி செய்து முடிக்கப்பட்டது. அடுத்த கட்டமாக கன்னியாகுமரியில் இந்த பணி 2 நாட்கள் நடந்தது. கன்னியாகுமரி அருகே சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் தயாரிக்கப்பட்ட செயற்கை பவளப்பாறைகள் பெரிய படகுகளில் கடலுக்குள் கொண்டு செல்லப்பட்டன. கன்னியாகுமரி வாவத்துறை கடற்கரையில் இருந்து 3 கடல் மைல் தூரத்தில் திருவள்ளுவர் சிலைக்கு பின் பகுதியில் இவை கடலில் போடப்பட்டன. வாவத்துறை மீனவர்கள் உதவியுடன் தூத்துக்குடியை சேர்ந்த ஷெரின் ஷிப்பிங் நிறுவனம் இந்த பணியை செய்தது.

இதுகுறித்து மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த அதிகாரி மோகன் கூறுகையில், கன்னியாகுமரி கடலில் 200 செயற்கை பவளப்பாறைகள் போடப்பட்டன.

இதன் மொத்த எடை 170 டன். அடுத்த 3 மாதங்களில் இப்பகுதியில் மீன்களின் இனப்பெருக்கம் அதிகரிக்கும் என்றார்.

## 2 வாரங்களுக்கு பிறகு கோழிக்கறி விலை கிலோவிற்கு ரூ.10 அதிகரிப்பு



**கோவை**: கடந்த 2 வாரங்களாக தொடர்ந்து சரிவை சந்தித்து வந்த கோழிக் கறி விலை கிலோவிற்கு ரூ10 அதிகரித்துள்ளது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் கறிக்கோழி அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. உற்பத்தியாளர்கள் கறிக்கோழி விலையை தினசரி நிர்ணயித்து வருகின்றனர். அதன் படி பண்ணை மொத்த கொள்முதல் விலை, சில்லரை விற்பனையில் உயிருடன் சில்லரை விலை, தோலுடன் கறி விலை, தோல் நீக்கிய கறி விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்கின்றனர். கறிக்கோழி, கடந்த 11ம் தேதி மொத்த கொள்முதல் விலை உயிருடன் கிலோ ரூ.81 ஆகவும், 15ம் தேதி ரூ.79 ஆகவும், 18ம் தேதி ரூ.75 ஆகவும், 20ம் தேதி ரூ.73 ஆகவும், 21ம் தேதி ரூ.65 ஆகவும், 26ம் தேதி ரூ.62 ஆகவும், 27ம் தேதி ரூ.60 என படிப்படியாக குறைந்து வந்தது. இதனால், சில்லரை விலையில் தோல் நீக்கிய கறி கிலோ ரூ.160 லிருந்து படிப்படியாக சரிந்து ரூ.130க்கு வந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் மொத்த கொள்முதல் விலை உயிருடன் கிலோ ரூ.65 ஆக உயர்ந்தது. இதனால் சில்லரை விலையில் தோல் நீக்கிய கறி ரூ.140க்கு விற்கப்பட்டது. 2 வாரத்திற்கு பிறகு விலை உயர்ந்ததால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அக்னி நட்சத்திரம் முடிந்துள்ளதால், கறிக்கோழி வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து, அதன் விலை உயர்ந்துள்ளது. இன்னும் விலை உயர வாய்ப்புள்ளது என்றும் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். சேலம்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் பங்கேற்று, முட்டை விலையில் 10

காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். அதன் படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 305 காசாக நிர்ணயிக்கப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டதாக விலை நிர்ணய குழுவினர் தெரிவித்தனர்.

**எள் விற்பனை அமோகம்**



**திருச்செங்கோடு**: நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு கொங்கணாபுரத்தில் கிளை உள்ளது.

இதன் கீழ் இயங்கி வரும் தேவூர் எள் விற்பனை மையத்திற்கு பூலாம்பட்டி, ஆடையூர், பில்லுக்குறிச்சி, புள்ளாக்கப்பட்டி, கல்வடங்கம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் எள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

நேற்று நடந்த ஏலத்தில் 450 மூட்டை எள், ரூ.30 லட்சத்திற்கு விற்பனையானது. வெள்ளை எள் கிலோ ரூ.103 க்கும், கருப்பு ரக எள் கிலோ ரூ.101க்கும், சிவப்பு ரக எள் கிலோ ரூ.87.80 க்கும் விலை போனது.

இந்த ஏலத்தில் காங்கேயம், திணடுக்கல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று எள்ளை கொள்முதல் செய்தனர்.

எள் வரத்தை பொறுத்து அதற்கான விலை நிர்ணயம் அன்றைய தினத்தில் மட்டுமே முடிவு செய்து ஏலம் எடுப்பதாக வியா பாரிகள் தெரிவித்தனர்,

**<u>கால்நடைகளுக்கு இலவச குடற்புழு நீக்க முகாம்</u>**

**விழுப்புரம்**, : விழுப்புரம் மாவட்டத்தில் இன்றும், நாளையும் இலவசமாக குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளதாக விழுப்புரம் மாவட்ட கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: தமிழக முதல்வரால் தொடங்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில் தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஒரு பயனாளிகளுக்கு 4 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வீதம் 31 மாவட்டங்களில் 4 லட்சம் பயனாளிகளுக்கு 16 லட்சம் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளும், 21 மாவட்டங்களில் 36,000 பயனாளிகளுக்கு 36,000 கறவை பசுக்களும் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித்திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் இன்று, நாளையும் கறவைப்பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடக்கிறது.

அரசு கால்நடைகள் பெற்ற பயனாளிகள், மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் இதனை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**<u>ஊட்டியில் தொடர் மழை</u>**

**ஊட்டி**, : நீலகிரியில் கடந்த மூன்று மாதங்களாக நிலவி வந்த காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு தற்போது வானம் மேக மூட்டத்துடனும், அவ்வப்போது மழை பெய்து வருவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆண்டு தோறும் மே மாதம் இறுதி வாரத்தில் துவங்கி நவம்பர் மாதம் வரை ஊட்டியில் சூறாவளி காற்றுடன் கூடிய கன மழை பெய்வது வழக்கம். ஆனால், கடந்த ஆண்டு நீலகிரியில் வடகிழக்கு பருவமழை பொய்த் தது. இதனால், ஊட்டி

மற்றும் குன்னூர் போன்ற பகுதிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பெரும்பாலான அணைகள் வறண்டு போயின. இதனால் கடும் குடிநீர் தட்டுப்பாடும் நிலவி வந்தது.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வந்தது. கடந்த இரு நாட்களாக ஊட்டியில் இரவு நேரங்களில் கன மழை பெய்து வருகிறது. நேற்று காலை முன்தினம் மாலை லேசான மழை பெய்யத் துவங்கியது. பின், இரவில் சுமார் 4 மணி நேரம் கன மழை பெய்தது. இதனால், பெரும்பாலான பகுதிகளில் விவசாய நிலங்களில் உள்ள கிணறு மற்றும் குளங்களில் தண்ணீர் தேங்கி நிற்க ஆரம்பித்துள்ளது. அதே போல் வறண்டு போயிருந்த பெரும்பாலான அணைகளில் தண்ணீர் அளவு உயரத்துவங்கியுள்ளது. கடந்த இரு நாட்களாக பெய்து வரும் மழையால் ஊட்டி மற்றும் சுற்றுப் புற கிராமங்களில் உள்ள தேயிலை, மலைகாய்கறி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் பயிர் செய்யும் பணிகளிலும், உரமிடும் பணிகளை துவக்கியுள்ளனர். கடந்த சில நாட் களாக மேக மூட்டத்துடன் அவ்வப்போது மழை பெய்து வருவதால் முன்னதாகவே பருவ மழை துவங்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். மேலும், மழையின் காரணமாக கடந்த இரு மாதங்களாக ஊட்டியில் நிலவி வந்த வெட்கை குறைந்து தற்போது குளு குளு காலநிலை நிலவுகிறது. தமிழகத்தில் பெரும்பாலான பள்ளிகள் 4ம் தேதி திறக்கப்படுகிறது. எனவே, இதற்கு மேல் வரும் சுற்றுலா பயணிகள் ஊட்டியில் எப்போதும் காணப் படும் குளிரான காலநிலையை அனுபவிக்க வாய்ப்புள்ளது. வனங்களிலும் பசுமை திரும்பி வருவதால் வனத்துறையினர் காட்டு தீ அச்சத்தில் இருந்து முற்றிலுமாக விடுபட்டுள்ளனர். அணைகள் நிரம்புகின்றன: நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க ஆதரமாக உள்ள மார்லிமந்து, டைகர் ஹில், கோரி சோலா, தொட்டபெட்டா அப்பர் மற்றும் லோவர், கோடப்மந்து அப்பர் மற்றும் லோவர், ஓல்டு ஊட்டி மற்றும் கிளன் ராக் ஆகிய அணைகளில் தற்போது கணிசமாக நீர்மட்டம் உயரத்துவங்கியுள்ளது. தொடர்ந்து மின் உற்பத்திக்காக குந்தா மின் வாரிய அணையில் இருந்து நீரை எடுத்து வந்த நிலையில், பார்சன்ஸ்வேலி அணை யிலும் தண்ணீர் அளவு குறையத் துவங்கியது. தற்போது நீலகிரி மாவட்டத்தில் அவ்வப்போது பரவலாக மழை பெய்து வரும் நிலையில், பார்சன்ஸ்வேலி அணையின் நீர்மட்டமும் உயரத்துவங்கியுள்ளது.

**ஆடுகளின் எடை அதிகரிக்க குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் : 30,31ல் நடக்கிறது**

**ஊட்டி,** : தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடை அதிகரிக்க கால்நடை பராமரிப்புத்துறையினரால் மூலம் குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் இன்றும், நாளையும் நடக்கிறது.

நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் கூறியிருப்பதாவது:

நீலகிரி மாவட்டத்தில் தமிழக அரசின் விலை யில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆடுகளின் எடை யினை அதிகரிக்க, கால்நடை பராமரிப்புத்துறையினரால் குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் 30,31 ஆகிய தேதிகளில் நடக்க உள்ளது. ஊட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பாலகொல, ஆனைகட்டி (எப்பநாடு), மசினகுடி ஆகிய கிராமங்களிலும், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தல் பேரட்டி, வண்டிச்சோலா, பார்லியார் ஆகிய கிராமங்களில் நடக்கிறது. கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஜக்கனாரை, கடினமாலா, கொணவக்கொரை, கெங்கரை, கோடநாடு ஆகிய கிராமங்கில் நடக்கிறது. கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேரங்கோடு, நெலாக்கோட்டை, ஸ்ரீமதுரை ஆகிய கிராமங்களிலும் குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் நடக்க உள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2011-12, 2012-13 மற்றும் 2013-14 ஆகிய மூன்று ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்டு பயனடைந்த பயனாளிகள் மட்டும் அல்லா மல் அனைத்து விவசாயிகளும் குடற்புழு நீக்க சிகிச்சை முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு சங்கர் கூறியுள்ளார்.

**கோடைமழையை பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம் தோட்டக்கலை உதவி இயக்குனர் தகவல்**

**கடலூர்**, : கோடை மழையை பயன்படுத்தி தரிசாக கிடக்கும் சாகுபடி நிலத்தில் கோடை உழவு செய்வது குறித்து ஆலோசனைகளை தோட்டக்கலை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். பொதுவாக பயிர் அறுவடைக்குப் பின்னர் அடுத்த சாகுபடி வரை நிலத்தை அப்படியே வைத்து விடுவது வழக்கமாகக் கொள்கிறோம். இடையில் மழை பெய்தா லும் எவ்வித பணியும் செய்யப்படுவது இல்லை. இது போன்ற நிலை பெரும் பாலும் கோடை காலங்க ளில் காணலாம். எனவே கோடை உழவின் பயனை அறிந்து கொண்டு கோடை யில் பெய்யும் மழையை நன்கு

பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பயிர் அறுவடை செய்த பின் முந்தைய பயிரைத் தாக்கிய பூச்சிகளின் முட்டை, கூட்டுப்புழு போன்றவை அப்படியே மண்ணில் உயிருடன் புதைந்திருக்கும் உழவின் போது இவை அனைத்தும் மேலே கொண்டுவரப்பட்டு அழிக்கப்படுகிறது. உழவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது வயலில் ஆங்காங்கே குருவிகள் மண்ணில் அமர்ந்து எதயோ பொறுக்குவதைக் காணலாம். கோடை உழவிற்கு பெய்யும் மழை நீர் அப்படியே மண்ணிற்கு கீழே சென்றடைகிறது. மழை நீர் சேகரிப்பிற்கு இது ஒரு நல்ல உதாரணமாகும். முந்தைய பயிரை தாக்கிய சில பூச்சியினங்கள் அடுத்த சாகுபடி வரை சாகாமல் வயலில் வளர்ந்திருக்கும் களை செடிகளில் ஒட்டி உணவாக்கிக் கொண்டு தங்களது வாழ்க்கைச் சூழற்சியை நன்கு பயன்படுத்தி வரும். கோடை உழவின் போது களைச் செடிகள் அழியும் போது இது போன்ற பூச்சியினங்களும் அழிந்து விடும். மண்ணில் பாஸ்பரஸ், துத்தநாகம், இரும்பு போன்ற சத்துக்கள் போதிய அளவில் இருந்தாலும் அவை பயிருக்கு எளிதாக கிட்டும் நிலையில் இருக்காது. இவ்வாறான நிலையில் வெப்பம், காற்று, நீர் ஆகிய காரணிகளைப் பயன்படுத்தி எளிதில் பயிருக்கு கிடைக்கும் சத்துக்களாக மாறி பயிரை சென்றடைகிறது. முந்தைய பயிரைத் தாக்கிவிட்டு பல ஆண்டுகள் சாகாமல் மண்ணிலே வாழ தகுதி படைத்த சில நூற்புழுக்கள், அழுகல் நோய்கிருமிகள், வாடல் நோய் கிருமிகள், சூரிய வெப்பத்தாலும், ஒளியாலும் அழிக்கப்பட்டு மண் சுத்தப்படுத்தப்படுகிறது. இவ்வாறாக மண் நலம் பேணப்படுவதால் மண் வளம் கூடுகிறது. எனவே விவசாயிகள் அனைவரும் கோடை மழையைப் பயன்படுத்தி குறைந்த செலவில் அதிகப் பலனை பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். என இத்தகவலை கடலூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் வீரமணி தெரிவித்துள்ளார்.

**கரூர் மாவட்டத்தில் பாமாயில் சாகுபடி 100 எக்டேரில் இலக்கு வேளாண் அதிகாரிகள் தகவல்**

**கரூர்,** : கரூர் மாவட்டத்தில் 100எக்டேர் பரப்பில் பாமாயில் மர சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.7மிமீ,. நடப்பாண்டில் 25சதம் மழை குறைவாகவே கிடைக்கப் பெற்றுள்ளது.

வடகிழக்கு பருவ மழையினால் வளர்ச்சி பருவத்தில் உள்ள மானாவாரி பயிர்களான சோளம், துவரை, நல்ல நிலையில் உள்ளது. சம்பா பருவநெல் 12260 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு பயிர்கள் வளர்ச்சி நிலையில் உள்ளன. காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சூரியகாந்தி பயிரில் 1028 டன், எள்பயிரில் 1764 டன் மகசூல் கிடைக்கப் பெற்றுள்ளது. எண்ணை வித்துப்பயிரில் பாமாயில் மர சாகுபடியை அதிக அளவில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல மடங்கு அதிக எண்ணை மகசூல் தரவல்ல எண்ணைப்பனை (பாமாயில் மரம்) சாகுபடி செய்வதற்கு தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் 2013-14ம் ஆண்டிற்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.55.28 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு எண்ணைப்பனை 100ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்ய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எண்ணைப்பனை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான கன்றுகள் விநியோகம் செய்ய மானியம் எக்டேருக்கு ரூ.10ஆயிரம், நடவு மானியம் ரூ.6ஆயிரம் ஒரு எக்டேருக்கு அளிக்கப்படுகிறது. 2ம் ஆண்டு பராமரிப்பு மானியமாக 37எக்டேருக்கு ரூ.1.29லட்சம் நிதிபெறப்பட்டுள்ளது. 3ம்ஆண்டு பராமரிப்பு மானியமாக 46எக்டேருக்கு ரூ.2லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எண்ணைப்பனை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகளின் வயல்களுக்கு சொட்டுநீர் பாசனம் 100எக்டேர் பரப்புக்கு ரூ.7.5 லட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த உரம், பூச்சி நோய் நிர்வாகம்,. பாதுகாப்பிற்கு 100எக்டேருக்கு ரூ.5லட்சம் 2ம்ஆண்டுக்கு 37எக்டேருக்கும். 3ம்ஆண்டுக்கு 46எக்டேருக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். எண்ணைப்பனை தோட்டத்தில் மண்புழு உரம் தயாரிக்க குடில் அமைக்கும் விவசாயிகளுக்கு 8எக்டேருக்கு ரூ.15ஆயிரம் வீதம், நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. 6எண்கள் ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ.50ஆயிரம் வீதம் ரூ.3லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எண்ணைப்பனை சாகுபடி செய்து பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குனர்களை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>பருவமழைக்கு முன்கூட்டியே ஏரி, குளம், வரத்து வாய்க்கால் சீரமைத்து தூர்வார வேண்டும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்</u>**

**பெரம்பலூர்**, : பெரம்பலூர் மாவட்டத்தில் பருவமழைக்கு முன்கூட்டியே ஏரி, குளம், வரத்து வாய்க்கலை சீரமைத்து தூர் வார வேண்டுமென விவசாயிகள் தெரிவித்தனர். பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் தரேஸ் அஹமது தலைமை வகித்தார். டிஆர்ஓ ராஜன்துரை முன்னிலை வகித்தார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை வரவேற்றார். வேளாண்மைதுறை இணை இயக்குனர் அழகிரிசாமி, துணை இயக்குனர் சுப்ரமணியன், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் வளர்மதி பங்கேற்றனர். கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் செல்லதுரை பேசியதாவது: தமிழக அரசால் ஒதுக்கப்பட்டுள்ள வறட்சி நிவாரண நிதி போதுமானதாக இல்லை. மேலும் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும். வறட்சியால் மாடுகளுக்கு தீவனங்கள் இல்லாத நிலையில் 50 சதவீத மானியத்தில் மாட்டு தீவனங்கள் வழங்க வேண்டும். வரயிருக்கிற பருவமழைக்கு முன்கூட்டியே பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், வரத்து வாய்க்காலை சீரமைத்து தூர்வார வேண்டும். போர்போட வும், அடிக்கிணறுகளை வெட்டவும் வங்கி கடனுதவி வழங்க வேண்டும். தமிழக அரசு அறிவித்துள்ளபடி ஜூன் மாதத்திலிருந்து தடையற்ற மின்சாரம் வழங்க வேண்டும். பல்வேறு கிராமங்களில் வழங்காமல் உள்ள முதியோர் உதவித்தொகையை விரைந்து வழங்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர் சங்க மாவட்ட தலைவர் ராஜேந்திரன் பேசியதாவது: மலையாளப்பட்டி அருகே பச்சைமலை அடிவாரத்தில் அதிக நீரோட்டமுள்ள சின்னமுட்லு பகுதியில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க வேண்டும். வி.களத்தூர் கல்லாற்றில் 3 இடங்களிலும், திருமாந்துறை வெள்ளாற்றில் 3 இடங்களிலும் விவசாய பணிகளுக்காகவும், நிலத்தடி நீர்மட்டம் உயரவும் தடுப்பணைகள் கட்டி தண்ணீரை சேமிக்க வேண்டும். பெரம்பலூர் எறையூர் நேரு சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய ரூ.9 கோடி கரும்பு பணத்தை தாமதமின்றி ஆலை நிர்வாகம் வழங்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட வேண்டும். பெரம்பலூர் சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியில் 1,365

ஏக்கரும், தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியில் 300 ஏக்கரும் வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிருக்கு நிவாரணத்தொகை வழங்க வேண்டும். மாவட்ட அளவில் கோமாரிநோயால் பாதிக்கப்பட்டு இறந்துபோன கறவை மாடுகளுக்கான இழப்பீட்டுத்தொகை வழங்க வேண்டும். வறட்சியால் கருகிப்போன, காய்க்காமலுள்ள தென்னை மரங்களுக்கு நிவாரணத்தொகை வழங்க வேண்டும் என்றார். கூட்டத்தில் தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க தலைவர் விசு வநாதன், தமிழ்நாடு பாமா யில் சாகுபடியாளர் சங்க தலைவர் துங்கபுரம் முருகே சன், தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் மாணிக்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஜெயராமன், தமிழக விவசாயிகள் கட்சி மாவட்ட தலைவர் ராம சாமி, ரமேஷ் மற்றும் அனை த்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். பெயர் பலகையில் ஒட்ட வேண்டும் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் செல்லதுரை மேலும் கூறுகையில், அரசாணை எண் 92ன்படி தலித் மாணவர்களுக்கு அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் கட்டணமின்றி இலவச சேர்க்கை நடத்த வேண்டும். அரசு நிர்ணயித்த கல்வி கட்டண விபரங்கள் அனைத்து தனியார் பள்ளிகளிலும் பெயர் பலகைகளில் ஒட்ட வேண்டும். அதே கட்டணம் தான் வசூலிக்கிறார்களா என்பதை குழு அமைத்து ஆய்வு நடத்த வேண்டும் என்றார்.

**<u>பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோள பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை</u>**

**பெரம்பலூர்,** : பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோள பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை விரைவில் துவங்கப்படவுள்ளது என்று கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்தார். பெரம்பலூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. டிஆர்ஓ சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். கலெக்டர் தரேஸ் அஹமது தலைமை வகித்து பேசியதாவது:

பெரம்பலூர் மாவட்டத்தில் 2013ம் ஆண்டு 814.36 மிமீ மழை பெய்துள்ளது. இது சராசரி மழையளவைவிட 36 மி.மீ குறைவாகும். மே மாதம் 2014ல் சராசரியாக பெய்ய வேண்டிய மழையளவு 55 மி.மீ ஆகும். ஆனால் சராசரியைவிட மிகுதியாக மே மாதத்தில் 192.6 மி.மீ மழை பெய்துள்ளது. பெரம்பலூர் மாவட்டம் பூலாம்பா டியிலும், செட்டிக்குளத்திலும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

துவங்கப்படவுள்ளது. மேலும் பெரம்பலூர் மாவட்டத்தில் அதிகளவு உற்பத்தி செய்யப்படும் மக்காச்சோ ளத்தை கொண்டு மக்காச்சோள பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை விரைவில் துவங்கப்படவுள்ளது. உணவு பொருட்களை பதப்படுத்தும் தொழிற்சாலையும் துவங்கப்படவுள்ளது. கல்வி கடனுக்கான லோன்மேளா பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டையில் ஜூலை 26ம் தேதி, ஆலத்தூர் மற்றும் வேப்பூர் பகுதியில் ஆகஸ்ட் 2ம் தேதி, பெரம்பலூர் மாவட்டத்தில் ஆகஸ்டு 30ம் தேதி நடத்தப்படும். வேப்பூர் பகுதியில் துவங்கப்பட்டுள்ள அரசு மகளிர் கல்லூரியில் மாணவிகள் சேர்க்கை விறுவிறுப்பாக நடந்து வருகிறது. தற்போது 40 காலியிடம் உள்ளது. மாணவிகள் விரைந்து விண்ணப்பித்து பயன்பெறலாம் என்றார்.

## கைகொடுத்தது கோடைமழை காய்கறி சாகுபடியில் விவசாயிகள் மும்முரம்

**கரூர்**, : கோடை மழை கைகொடுத்ததால் கரூர் மாவட்டத்தில் தானியம், பயறு, காய்கறி சாகுபடி பணிகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். கரூர் மாவட்டத்தில் போதுமான மழைபொழிவு இல்லை. கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை சராசரி மழை அளவினை விட குறைவாகவே பெய்தது. இந்த ஆண்டு துவக்கத்தில் மழைக்காலத்தில் குறைந்த அளவே மழைபெய்தது. கோடை மழையும் பிற மாவட்டங்களில் பெய்ததைப்போன்று கரூர் மாவட்டத்தில் பெய்யவில்லை. கரூர் மாவட்டத்தில் குளிர்கால பருவ சராசரி மழையான 16.80மீட்டருக்கு மழை ஏதும் பெறப்படாத நிலையில் சம்பா பருவத்தில் நெல் 12313 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டது. 17108 எக்டேரில் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது. 7381 எக்டேரில் பயறுவகைகள் சாகுபடி செய்யப்பட்டது. கரூர் மாவட்டத்தின் உணவு தானிய உற்பத்தி இலக்கு ஆயிரத்து 212லட்சம் டன் ஆகும். நெல், சிறுதானியப்பயிர்களான சோளம், கம்பு ஆகியவைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர் அறுவடை பரிசோதனை முடிவுகளின்படியும், மற்ற பயிர்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பயோமெட்ரிக் முறையில் கணிக்கப்பட்டுள்ள மகசூல்படியும், அனைத்து உணவு தானிய பயிர்களில் மொத்த உற்பத்தி ஆயிரத்து 252 லட்சம் டன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. வறட்சி காரணமாக இந்த இலக்கினை எய்த முடிவில்லை. தற்போது பெய்த கோடை மழை காரணமாக சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு

கோடைப்பருவத்தில் 3852 எக்டேரில் சிறுதானியப்பயிர்கள், 2355எக்டேரில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது. தற்போதும் அதே அளவுக்கு கோடைமழையைப் பயன்படுத்தி பயிர்கள் சாகுபடி ஆகும் என வேளாண்துறையினர் எதிர்பார்க்கின்றனர். சூரியகாந்தி, எள் போன்றவற்றையும் விவசாயிகள் கோடை மழையினை பயன்படுத்தி சாகுபடி செய்துள்ளனர். ஆங்காங்கே கிணற்றுப்பாசனத்தில் வெண்டைக்காய், தக்காளி, போன்ற காய்கறிபயிர்களை விவசாயிகள் பயிரிட்டிருக்கின்றனர். தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் 800எக்டேரில் பழக்கன்றுகள், காய்கறி விதைகள் மலர்கள் 50சதம் மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கோடை மழை சிறுதானியம், பயறு வகைகள் மற்றும் தானிய பயிர்களுக்கு கைகொடுத்துள்ளதால் விவசாயிகள் சாகுபடி பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

**<u>மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்ய வேண்டும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்</u>**

**ஆலங்குடி**, : ஆலங்குடியை அடுத்த திருவரங்குளம் வட்டாரத்தில் ஆங்காங்கே பெய்துவரும் மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்ய வேண்டும் என வேளாண் உதவி இயக்குநர் சிவக்குமார் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: உழவு செய்யாத கெட்டியான நிலத்தில் விழும் மழைத்துளியானது மண் அரிப்பை ஏற்படுத்தி வேகமாக வழிந்து வெளியேறுகிறது. நீரும் அதிக வெப்பத்தால் வெகுவிரைவில் ஆவியாக மாறி வீணாகிறது. இவற்றைத் தடுக்க கோடை மழை பெய்தவுடன் நிலத்தில் ஈரம் உள்ளபோது உழவு செய்வதன் மூலம் நிலத்தில் நீர் ஊடுருவுகிறது. நீர் ஆவியாவது தடுக்கப்பட்டு மண் அரிப்பும் தவிர்க்கப்படுகிறது. கோடை உழவு செய்யும்போது சரிவுக்கு குறுக்கே உழவு செய்வது மிகவும் சிறந்தது. இதனால் மழை நீர் தேங்கி நின்று மண்ணின் அடிப்பகுதிக்கு செல்லும். மேலும் மண் புரட்டிப் போடப்படுவதால் மண்ணில் உள்ள பூச்சிகளின் கூட்டுப் புழுக்கள் வெளிக்கொணரப்பட்டு பறவைகளால் உண்ணப்படுகின்றன. இதனால் பூச்சிகளின் தாக்குதலும் குறையும். எனவே, நிலங்களில் பயிரில்லாத இந்த

தருணத்தில் கோடை உழவு செய்து மழை நீரை சேமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

## கொள்ளிடம் பகுதியில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

**கொள்ளிடம்**, : நாகை மாவட்டம், கொள்ளிடம் பகுதியில் நேற்று மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கொள்ளிடம் பகுதியில் நேற்று மதியம் 2 மணியளவில் திடீரென மழை பெய்ய தொடங்கி சுமார் 1 மணி நேரம் மாலை 3 மணிவரை பலத்த மழை பெய்தது. கொள்ளிடம் மாங்கணாம்பட்டு, புத்தூர், எருக்கூர், கொன்னக்காட்டுபடுகை, கீரங்குடி, சரஸ்வதிவிளாகம், சிதம்பரநாதபுரம், ஆச்சாள்புரம், நல்லூர் உள்ளிட்ட 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் மழை தொடர்ந்து பெய்ததால் சில தினங்களாக நிலவிய வெப்பம் சற்று தணிந்து குளிர்ச்சியாக காணப்பட்டது. இந்த மழை கொள்ளிடம் அருகே உள்ள சந்தபடுகை, திட்டுபடுகை, நாதல்படுகை, முதலைமேடு, பில்படுகை, ஆகிய கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளிகிழங்கு, வெங்காயம், கத்தரி, வெண்டை, முள்ளங்கி, கொத்தவரை, வாழை உள்ளிட்ட தோட்டப்பயிர்களுக்கும் மல்லி, முல்லை, ரோஜா ஆகிய பூச்செடி சாகுபடிக்கும் பயனுள்ளதாக அமைந்தது என்று கொள்ளிடம் ஒன்றிய தோட்டப்பயிர் சாகுபடிதாரர்கள் சங்க தலைவர் ரவிசுந்தரம் தெரிவித்தார். நேற்று பெய்த மழையால் விவசாயிகள், பொதுமக்கள், வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## பயறு வகைகளில் அதிக விளைச்சல் பெற்றிட டி.ஏ.பி. கரைசல் வேளாண் அதிகாரிகள் ஆலோசனை

**பழநி,** : பயறு வகைகளில் அதிக விளைச்சல் பெற்றிட டி.ஏ.பி. கரைசல் பயன்படுத்த வேண்டுமென வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர். பழநி பகுதியில் 10 ஆயிரம் எக்டேருக்கு மேல் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள பயறுவகைகளில் நல்ல தரமான மணிகளை பெற வேளாண் அதிகாரிகள் கூறியுள்ள ஆலோசனை: தரமான பயிர்களை பெற்றிடவும், கூடுதல் மகசூல் பெற்றிடவும் டி.ஏ.பி. கரைசலை

இருமுறை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டி.ஏ.பி. உரத்தினை முதல் நாள் 10 லிட்டர் நல்ல தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் மாலை ஊற வைத்த கரைசலில் இருந்து தெளித்த நீரை வடித்து எடுத்து அதனை 190 லிட்டர் நல்ல தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலமாக பூக்கும் தருவாயில் ஒரு முறையும் மறுமுறை மேற்கூறிய முறையில் மீண்டும் 10 முதல் 15 நாள் இடைவெளியில் கைத் தெளிப்பான் மூலமாக 200 லிட்டரில் கலந்து தெளிக்க வேண்டும். அதன் மூலமாக அதிகப்படியான பூக்களும், திறட்சியான மணிகளும் நல்ல விளைச்சலும் பெறலாம். தற்சமயம் டி.ஏ.பி. கரைசல் விரிவாக்க மையத்தில் மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகின்றது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் உரிய மானிய விண்ணப்பம் பெற்று வாங்கிக் கொள்ளலாம் வேளாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**<u>மாம்பழம் வரத்து அதிகரிப்பு</u>**

**திண்டுக்கல்,** : திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு மாம்பழ வரத்து அதிகரித்துள்ளது. தமிழகத்தில் சேலத்திற்கு பிறகு திண்டுக்கல் அருகே நத்தத்தில்தான் மாம்பழம் அதிகளவில் சாகுபடி செய்யபடுகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் மாம்பழம் திண்டுக்கல் மற்றும் வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. குறிப்பாக திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு அதிகளவில் விற்பனை மாம்பழம் வரும். இந்த வருடம் மாம்பழ வரத்து சற்று கூடுதலாக வந்துள்ளது. செந்தூரம், நீலம் காசாலட்டு, சப்பட்டை, இமாம்பசந்த், கல்லாமை, ஒட்டுமல்கோவா, பால்கோவா உள்ளிட்ட 17 வகையான மாம்பழங்கள் இந்தமுறை விற்பனைக்கு வந்துள்ளன. ஒட்டுமல் கோவா கிலோ ரூ.50க்கும், கல்லாமை கிலோ ரூ.40க்கும், செந்தூரம் கிலோ ரூ.25க்கும் விற்பனையாகின்றன.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மீன்பிடி தடைக்காலம் முடிந்தது: விசைப்படகு மீனவர்கள், நாளை கடலுக்கு மீன்பிடிக்க செல்கின்றனர்



**கோட்டைப்பட்டினம்,**

மீன்பிடி தடைக்காலம் முடிவுக்கு வந்ததால் புதுக்கோட்டை மாவட்ட விசைப்படகு மீனவர் கள் நாளை முதல் கடலுக்கு மீன்பிடிக்க செல்கின்றனர்.

மீன்பிடி தடைக்காலம்

தமிழகத்தில் ஆண்டு தோறும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மீன்களின் இனப் பெருக்க காலமாக கருதி விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடிக்க தடை விதிக்கப்படும். அதன் படி இந்த ஆண்டும் கடந்த மாதம் 15–ந் தேதி முதல் நேற்று வரை 45 நாட்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டது.

இதனால் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜெகதாப் பட்டினம் மற்றும் கோட்டைப் பட்டினம் பகுதிகளை சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வில்லை. இதனால் 750–க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டன.

<u>தொழில்கள் பாதிப்பு</u>

மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் தங்கி மீன்பிடித்து வந்த, வெளி மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் தங்களது சொந்த ஊருக்கு சென்றனர். மற்ற மீனவர்கள் தங்களது படகு களை கரையில் ஏற்றி பழுது களை சரி செய்யும் பணியிலும், வலைகளை சரி செய்யும் பணிலும் ஈடுபட்டனர்.

விசைப்படகுகள் மீன் பிடிக்க செல்லாததால் இப் பகுதியில் மீன்பிடி சார்ந்த சிறு தொழில்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. மேலும் ஐஸ் தொழிற்சாலை, தனியார் டீசல் பங்கு ஆகியவை இயங் காமல் இருந்தது. மீன்களின் வரத்து குறைந்ததால், மீன் களின் விலை அனைத்து இடங்களிலும் இருமடங்காக உயர்ந்தது. இதனால் நடுத்தர மக்கள் மீன்கள் வாங்க முடியாமல் சிரமப்பட்டு வந்தனர்.

<u>நாளை கடலுக்கு செல்கின்றனர்</u>

இந்த நிலையில் நேற்றுடன் மீன்பிடி தடை காலம் முடி வுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து நாளை (சனிக் கிழமை) முதல் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்கின் றனர். இதனால் மீனவர்கள், வியாபாரிகள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். தடை காலத்தையொட்டி வெளியூர் சென்ற மீனவர்கள், மீண்டும் புதுக்கோட்டை மாவட்ட கடற்கரை கிராமங்களுக்கு வரத் தொடங்கியுள்ளனர்.

மேலும் பழுது பார்ப்பதற் காக கரையில் ஏற்றப்பட்டு பழுது நீக்கப்பட்டு, புதிதாக வண்ணம் பூசப்பட்ட விசைப் படகுகள், மீண்டும் கடலுக்குள் கொண்டு செல்லப்பட்டது. அவற்றில் மீன்பிடிக்க தேவை யான உபகரணங்களை மீன வர்கள் ஏற்றினர். வலைகள் தயார் நிலையில் குவித்து வைக்கப் பட்டன. நாட்டுப் படகுகள் மூலம் விசைப் படகு களுக்கு டீசலை கொண்டு சென்றனர். 45 நாட்கள் கழித்து விசைப் படகளில் மீனவர்கள் மீன் பிடிக்க செல்வதால் மீன்கள் அதிக மாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத னால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>செம்பனார்கோவில் பகுதிகளில் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



செம்பனார்கோவிலை அடுத்த பரசலூரில் பெய்த பலத்த மழையினால் முறிந்து விழுந்த மரத்தை படத்தில் காணலாம்.

**ஆக்கூர்,**

செம்பனார்கோவில் பகுதிகளில் பெய்த பலத்த மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பலத்தமழை

தமிழகத்தில் மக்களை வாட்டி வதைத்த கத்தரி வெயில் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது. இந்நிலையில் செம்பனார்கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று முன் தினம் பல இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

இந்த மழை பிற்பகல் 2 மணிக்கு தொடங்கி 4 மணி வரை பெய்தது. இதனால் மழைநீர் வடிய வழியின்றி சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. பரசலூர் அருகே வீசிய பலத்த காற்றில் மரங்கள் விழுந்தன. அதேபோல அப்பகுதியில் உள்ள மின்கம்பிகள் சூறைக்காற்றினால் அறுந்து விழுந்தது.

மின்தடை

இதனால் அந்தபகுதியில் மின் தடை ஏற்பட்டது. செம்பனார்கோவில், திருச்சம்பள்ளி, கீழையூர், கிடாரங்கொண்டான், பொன்செய், ஆறுபாதி, மேலப்பாதி, மேலையூர், கருவாழக்கரை, ஆக்கூர், நடராஜபிள்ளைசாவடி,

அல்லிவிளாகம் உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மா, பலா, வாழை, நெல், மரவள்ளிக்கிழங்கு, எள், வெண்டை, கத்தரி, அவரை, கொத்தவரை போன்ற பயிர்களுக்கு இந்த மழை பயனுள்ளதாக இருந்தது. இதனால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆனால் பருத்தி பயிர் செய்திருந்த விவசாயிகளுக்கு இந்த மழை பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. இதனால் பருத்தி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இந்த ஆண்டு கத்தரி வெயிலின் முதல் நாள் அன்றும், கடைசி நாள் அன்றும் மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

**பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1½ கோடிக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதியில் இருந்து விவசாயிகள் கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர். மொத்தம் 3 ஆயிரத்து 161 மூட்டைகளில் 1 லட்சத்து 53 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று 102 ரூபாய் முதல் 109 ரூபாய் 30 காசு வரையும், 2–ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ 65 ரூபாய் 5 காசு முதல் 100

ரூபாய் 15 காசு வரை ஏலம் போனது. கொப்பரை தேங்காய் மொத்தம் ரூ.1 கோடியே 60 லட்சத்துக்கு ஏலம் போனது.

**<u>வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்</u>**

**<u>ஊட்டி</u>**,

நீலகிரி மாவட்டத்தில் விலையில்லா வெள்ளாடு கள் மற்றும் செம்மறி ஆடு களுக்கு குடற்புழு நீக்க முகாம் இன்று (வெள்ளிக் கிழமை) நடை பெறுகிறது.

விலையில்லா வெள்ளாடுகள்

நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது:-

தமிழகத்தில் வறுமை கோட்டிற்கு கீழே உள்ள பெண் களின் வாழ்வாதாரத்தை முன் னேற்றுவதற்காக தமிழகமுதல்- அமைச்சர் ஜெயலலிதா ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகளை வழங்கினார்.

மேலும் விலையில்லா வெள் ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளைகொள் முதல் செய்து பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். இதற்காக கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ் புத்தாண்டு தினத்தன்று பரிசுகள் வழங்கப்பட்டு வரு கின்றன.

குடற்புழு நீக்க முகாம்

இந்த நிலையில் விலை யில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளின் எடை யினை அதிகரிக்க தமிழகம் முழுவதும் இன்று (வெள்ளிக் கிழமை) மற்றும் சனிக்கிழமை வெள்ளாடுகள் மற்றும் செம் மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது.

விலையில்லா வெள்ளாடு கள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன் பெற்ற பயனாளி கள் மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன் படுத்தி கொள்ளலாம். கால் நடைகளுக்கான மருத்துவ முகாம் ஊட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பாலகொலா, ஆனைக்கட்டி (எப்பநாடு), மசினகுடி ஆகிய கிராமங்களில் நடைபெறுகிறது.

குன்னூர், கூடலூர்

இதேப்போல் குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில்வண்டி சோலா, பேரட்டி, பர்லியாறு ஆகிய கிராமங்களிலும், கோத் தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஜக்கனாரை, கடினமாலா, கொணவக்கரை, கெங்கரை, கோடநாடு ஆகிய கிராமங்க ளிலும், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேரங்கோடு, நெலாக்கோட்டை, ஸ்ரீமதுரை ஆகிய கிராமங்களில் கால் நடை பராமரிப்பு துறை அலு வலர்களால் மருத்துவ குழு அமைக்கப்பட்டு குடற்புழு நீக்கம் முகாம் நடத்தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## தஞ்சையில் இருந்து புதுக்கோட்டைக்கு 1000 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக சரக்கு ரெயில் மூலம் அனுப்பப்பட்டன



**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 1000 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக புதுக்கோட்டைக்கு அனுப்பப்பட்டன.

<u>நெற்களஞ்சியம்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் முடிவடைந்துள்ளன.

அறுவடை செய்யப்பட்ட நெல் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபகழகங்கள் மூலம் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருந்து நெல் மூட்டைகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சேமிப்புக்கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டு இருப்பு வைக்கப்படுகின்றன. இது தவிர வெளி மாவட்டங்களுக்கு லாரிகள் மூலமும், சரக்கு ரெயில் மூலமும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளுக்கும் அரவைக்கு நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

<u>1000 டன்</u>

தஞ்சையில் இருந்து நேற்று சரக்கு ரெயில் மூலம் 1000 டன் நெல்மூட்டைகள் அரவைக்காக புதுக்கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதற்காக பல்வேறு கொள்முதல் நிலையங்கள் மற்றும் சேமிப்புக்கிடங்குகளில் இருந்து 90 லாரிகளில் 23 ஆயிரத்து 850 நெல் மூட்டைகள் ஏற்றி வரப்பட்டு 25 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

**<u>மீனவர்கள் இன்று முதல் கடலுக்கு செல்கின்றனர்</u>**



நாகையில் மீன்பிடி தடைகாலம் முடிவடைந்ததையொட்டி மீனவர்கள் மீன்பிடிக்க செல்வதற்காக ஆயத்த பணியில் ஈடுபட்ட போது எடுத்த படம்.

**நாகப்பட்டினம்,**

மீன்பிடி தடைகாலம் முடிவடைந்ததால் மீனவர்கள் இன்று முதல் கடலுக்கு செல்கின்றனர்.

மீன்பிடி தடைகாலம்

தமிழகம் முழுவதும் ஏப்ரல் 15-ந் தேதி முதல் மே 29-ந் தேதி வரை 45 நாட்கள் ஆண்டுதோறும் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு கடந்த ஏப்ரல் மாதம் 15-ந் தேதி முதல் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது. அதன் ஒருபகுதியாக நாகை மாவட்டத்தில் சுமார் 1,500-க்கும் மேற்பட்ட விசைபடகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. இதனால் மீன்பிடி தொழில் மற்றும் அதனை சார்ந்த தொழில்களில் சுமார் 50 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டது. மீன்பிடி தடை காலத்தில் பைபர்படகுகள் கடலுக்கு செல்ல அனுமதி உண்டு என்பதால் பைபர்படகு மீனவர்கள் மட்டும் மீன்பிடி தொழிலில்ஈடுபட்டிருந்தனர்.

பழுதுபார்க்கும் பணி

மீன்பிடி தடைகாலத்தை பயன்படுத்தி நாகை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் தங்களது விசை படகுகளை பழுது பார்க்கும் பணிகளில் ஈடுபட்டனர். மேலும் புதிதாக வலைகளை வாங்கி, அதனை பின்னும் பணியிலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று நள்ளிரவுடன் மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்தது. இதனால் நாகையில் மீனவர்கள் 45 நாட்களுக்கு பிறகு மீண்டும் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை முதல் மீன்பிடிக்க கடலுக்கு செல்கின்றனர். மீன்பிடி தடைகாலம் முடிவடைந்ததையொட்டி நேற்று ஐஸ்பிளாண்டுகளில் ஐஸ்கட்டிகள் தயார் நிலையில் இருந்தன. இதையடுத்து நேற்று மீனவர்கள் கடலில் பிடிக்கும் மீன்களை பதப்படுத்தி கொண்டு வருவதற்காக ஐஸ்கட்டிகளையும், விசைப்படகுகளுக்கு தேவையான டீசல் உள்ளிட்ட மீன்பிடிக்க தேவையான அனைத்து உபகரணங்களையும் படகுகளில் ஏற்றும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

**<u>நாகை மாவட்டத்தில் ஆறு - வாய்க்கால்களை தூர்வார நடவடிக்கை</u>**



விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் முனுசாமி பேசியபோது எடுத்தபடம்,

**நாகப்பட்டினம்,**

நாகை மாவட்டத்தில் உள்ள ஆறு மற்றும் வாய்க்கால்களை தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் முனுசாமி கூறினார்.

குறைதீர்க்கும் கூட்டம்

நாகை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கினார். பின்னர் கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களது கோரிக்கைகள் குறித்து கூறினர். அப்போது அவர்கள் கூறியதாவது:-

காவிரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்க பொது செயலாளர்கோபிகணேசன்:-

மயிலாடுதுறை கோட்டத்தில் உள்ள வீரசோழன் ஆறு மற்றும் அதன் கிளை வாய்க்கால்களை தூர்வார வேண்டும். நாகை மாவட்டத்தில் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், பிளாட்டுகளாக மாறியுள்ள விளை நிலங்களை மீட்டு, அனுமதிபெறாத நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவாரூர், நாகை மாவட்ட ஆற்றுபாசன விவசாயிகள் சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன்:-

நிலத்தடி நீர் இல்லாத கடற்கரை பகுதியான நாகை கோட்ட பகுதி முழுமைக்கும் வேளாண்மை, வேளாண்மை பொறியியல் துறை மூலம் சிறப்பு சலுகைகளை அரசு வழங்க வேண்டும். அரசு வழங்கும் பயிர்காப்பீடு தொகைகளை அனைத்து விவசாயிகளுக்கும் சீராக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தடுப்பணை

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சம்பந்தம்:-

கடல் முகத்துவாரங்களில் கடல்நீர் புகுந்து ஆற்று நீர், உப்பு நீராக மாறுவதை தடுப்பதற்கு தடுப்பணை கட்டுவதற்கும், நிலத்தடி நீரை பாதுகாக்கவும், வடிகால்களை சீரமைக்கவும் கடந்த 2012-ம் ஆண்டு சட்டமன்றத்தில் ஆசியன் வளர்ச்சி வங்கி மூலம் ஆயிரத்து 562 கோடி ரூபாய் வழங்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து பொதுப்பணித்துறை அதிகாரிகள், வங்கி பொறுப்பாளர்கள் இணைந்து டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளிடம் கருத்து கேட்டு சென்றனர். எனவே அந்த பணி முடிய எத்தனை ஆண்டு காலம் ஆகும் என்பதை தெரிவிக்க வேண்டும். வேதாரண்யம் ஒன்றியத்திற்கு வறட்சி நிவாரணம் அறிவித்து போர்க்கால அடிப்படையில் உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுமண்ணியார் பாசனதாரர் சங்க தலைவர் கோதண்டராமன்:-

சீர்காழி தாலுகாவில் சுமார் 26 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த பகுதியின் முக்கிய பாசன பகுதியில் ஓடும் புதுமண்ணியாறு சுமார் 5 ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் உள்ளது. எனவே தகுந்த நடவடிக்கை எடுத்து இப்பகுதி மக்களின் நீர் ஆதாரமாக உள்ள ஆற்றை தூர்வார வேண்டும்.

தூர்வார நடவடிக்கை

சமூக ஆர்வலர் சோமு.இளங்கோ:-

மழைக்காலங்களில் கிடைக்கும் நீரை சேமிக்க தேவையான ஏரிகள் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஆறுகளில் கடல்நீர் புகுவதை தடுக்க ரெகுலேட்டர்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அதற்கான பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு விவசாயிகள் தங்களது கோரிக்கைகளை தெரிவித்தனர்.

வேளாண்விஞ்ஞானிகள்

பின்னர் இதுகுறித்து கலெக்டர் முனுசாமி கூறியதாவது:-

நாகை மாவட்டத்தில் தூர்வாரப்படாமல் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள் தூர்வாருவதற்கு பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு காலதாமதமின்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். நாகை மாவட்டத்தில் நடப்பாண்டில் சாதாரண நடவுமுறைக்கு 366 எக்டேர் பரப்பும், திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்ய 78 எக்டேர் பரப்பும் நாற்று விடப்பட்டுள்ளது. இதுவரை குறுவை சாகுபடியாக 1,376 எக்டேர் பரப்பில் சாதாரண நடவில், 793 பரப்பில் திருந்திய நெல் சாகுபடி நடவு பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் சிக்கலில் மட்டுமே வேளாண்மை அறிவியல் ஆராய்ச்சி நிலையம் உள்ளது. இதனால் மயிலாடுதுறை பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை குறித்த தகவல்கள் காலதாமதமாக கிடைக்கிறது. எனவே மயிலாடுதுறை பகுதிக்கு வேளாண்மை விஞ்ஞானிகள் அடிக்கடி சென்று பார்வையிட நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>கடலூர் துறைமுகத்தில் மத்தி மீன்கள் வரத்து அதிகம் அரியவகை மயில் மீன்களும் சிக்கின</u>



**கடலூர்முதுநகர்,**

45 நாட்கள் மீன்பிடி தடைக்காலத்திற்கு பிறகு கடலூர் துறைமுகத்தில் நேற்று மத்தி மீன்கள் வரத்து அதிகமாக காணப்பட்டது. மேலும், அரியவகை மீன்களில் ஒன்றான மயில் மீன்களும் சிக்கின.

மீன்பிடி தடைக்காலம்

கடலூர் துறைமுகத்தில் இருந்து நாள்தோறும் சிங்காரத்தோப்பு, சோனாங்குப்பம், அக்கரைக்கோரி, தேவனாம்பட்டினம் உள்ளிட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட விசை மற்றும் பைபர் படகுகளில் மீன்பிடிக்க ஆழ்கடலுக்கு சென்று வருவது வழக்கம்.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 15-ந் தேதி முதல் மே 29-ந் தேதி வரை மீன்பிடி தடை காலமாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. இந்த நாட்களில் படகு பராமரிப்பு, வலை சீரமைப்பு போன்ற பணிகளில் மீனவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் 45 நாட்களாக அமலில் இருந்த மீன்பிடி தடைக்காலம் நேற்று இரவு முடிவுக்கு வந்தாலும் ஒரு சில மீனவர்கள் நேற்று முன்தினமே மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

மயில் மீன்கள்

நீண்ட இடைவெளிக்கு பின்னர் நாட்டு படகுகளில் சென்ற மீனவர்கள் வலையில் 100 டன் மத்தி மீன்கள் கிடைத்தன. 40 கிலோ எடை கொண்ட மத்தி மீன்கள் அடங்கிய பெட்டி ஆயிரம் ரூபாய்க்கு விலைபோனது. மேலும் கவளை மீன் 3 டன்னும், இதர மீன்களும் கிடைத்தன. மீன்களை கேரள வியாபாரிகள் போட்டிப்போட்டுக் கொண்டு ஏலம் எடுத்தனர். பின்னர், மீன்களை ஐஸ்பெட்டியில் அடைத்து லாரி மூலம் கேரளாவிற்கு அனுப்பி வைத்தனர். அரியவகை மீன்களில் ஒன்றான மயில் மீன்களை தூண்டிலில் மட்டுமே பிடிக்க முடியும். இந்நிலையில், நேற்று தூண்டிலில் 15 மயில்மீன்கள் பிடிக்கப்பட்டன. இந்த மீன்கள் ஒவ்வொன்றும் சுமார் 100 முதல் 150 கிலோ எடை கொண்டது.

மருத்துவ குணம் கொண்ட இந்த மீன்கள் பெங்களூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தடைக்காலம் முடிவடைந்ததை தொடர்ந்து மீனவர்கள் கடலுக்குள் சென்று அவர்களின் பணியை தொடங்கியதால், மீன் ஏலம் விடும் தலம் பரபரப்பாக காட்சியளித்தது.

**<u>45 நாள் தடை காலம் முடிந்து புதுச்சேரி மீனவர்கள் இன்று கடலுக்கு செல்கிறார்கள்</u>**



**புதுச்சேரி,**

தடைக்காலம் முடிந்துள்ள நிலையில் புதுச்சேரி மீனவர்கள் இன்று கடலுக்கு செல்கிறார்கள்.

<u>தடைக்காலம்</u>

வங்கக்கடலில் மீன்வளத்தை பெருக்க மீன்பிடிக்க ஆண்டுதோறும் 45 நாட்கள் தடைவிதிக்கப்படுகிறது.

இந்த மீன்பிடி தடைக்காலம் தமிழகம்-புதுச்சேரியில் கடந்த மாதம் 15-ந்தேதி தொடங்கியது. நேற்றுடன் தடைக்காலம் முடிவடைந்தது.

இதைத்தொடர்ந்து புதுச்சேரி மீனவர்கள் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை முதல் கடலில் மீன்பிடிக்க செல்ல திட்டமிட்டுள்ளனர். இதற்காக அவர்கள் விசைப்படகுகளை பழுதுநீக்கி, வர்ணம் பூசி தயார் நிலையில் வைத்துள்ளனர்.

<u>வலைகள் சீரமைப்பு</u>

மேலும் வலைகளை சீரமைத்து அவைகளை நேற்றே படகுகளில் ஏற்றினார்கள். இதுதவிர மீன்பிடிக்க செல்லும்போது தேவையான தண்ணீர், உணவு பொருட்களையும் எடுத்து வைத்தனர். இருந்தபோதிலும் மீனவர்களுக்கு தேவையான வசதிகளை அரசு செய்து தரவில்லை என்று மீனவர் போத்ராஜ் குற்றஞ்சாட்டினார். கடலூர் மீனவர்கள் நேற்றே கடலுக்கு சென்றுள்ள நிலையில் புதுவை அரசு டீசல் மானியம் வழங்கவில்லை என்றும் தெரிவித்தார்.

**<u>கொடைக்கானலில் பிளம்ஸ் பழ சீசன் தொடங்கியது கூடுதல் விலையால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் பிளம்ஸ் பழ சீசன் தொடங்கி உள்ளது. கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>சீசன் தொடங்கியது</u>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகாவில் உள்ள பள்ளங்கி, அட்டுவம்பட்டி, வில்பட்டி, கோவில்பட்டி, வடகவுஞ்சி, பேத்துப்பாறை உள்பட பல்வேறு கிராமங்களில் பிளம்ஸ் பழங்கள் அதிக அளவில் விளைகின்றன. ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை பிளம்ஸ் பழ சீசன் இருக்கும். இந்த ஆண்டு

போதிய மழை இல்லாத காரணத்தால் ஏப்ரல் மாதத்தில் விளைச்சல் குறைவாக இருந்தது.

ஆனால் தற்போது அதிக அளவில் பிளம்ஸ் பழங்கள் விளைந்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கொள்முதல்

முதல்ரக பிளம்ஸ் பழங்கள் மொத்த விலையில் ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரையும், 2–வது ரகம் ரூ.40 முதல் ரூ.50 வரையிலும் கொள்முதல் செய்யப்படுகிறது. சில்லறை விலையில் இந்த பழங்கள் கிலோ ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகிறது. கூடுதல் விலைக்கு பழங்கள் கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலா பயணிகளும் அதிக அளவில் பிளம்ஸ் பழங்களை வாங்கிச் செல்கின்றனர். இதுகுறித்து விவசாயி அப்பாஸ் என்பவர் கூறும்போது, இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் ஆரம்பத்தில் பிளம்ஸ் பழம் விளைச்சல் குறைவாக இருந்தது. ஆனால் தற்போது அதிக அளவில் விளைச்சல் கண்டுள்ளது. இந்த பிளம்ஸ் பழங்கள் கொடைக்கானலில் இருந்து கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற வெளி மாநிலங்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இன்னும் ஒரு மாதம் வரை இந்த சீசன் நீடிக்கும் என்று கூறினார்.

## தாண்டிக்குடி அருகே பெருங்கானல் பகுதியில் தார்சாலை விவசாயிகள் மகிழ்ச்சி

**பெரும்பாறை,**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகா தாண்டிக்குடி ஊராட்சியில் உள்ள பெருங்கானல் பகுதியில் ஏராளமான விவசாயிகள் உள்ளனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் பழங்கள், காய்கறிகளை 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தாண்டிக்குடிக்கு கொண்டு வந்து அங்கிருந்து மதுரை, திண்டுக்கல், வத்தலக்குண்டு போன்ற ஊர்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இந்த பகுதியில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய தார்சாலை அமைப்பதற்கு ரூ.34 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு

பணிகள் முடிக்கப்பட்டன. தற்போது இந்த சாலையில் லாரி, ஜீப், வேன் போன்ற வாகனங்கள் சென்று வருகின்றன. இதையொட்டி இந்த பகுதியை சேர்ந்த விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் அரை கிலோ மீட்டர் தூரம் உள்ள மண் சாலையையும் தார்சாலையாக மாற்ற வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**<u>தேனி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பு தொழிலுக்கு கைகொடுத்த கோடை மழை</u>**



**ஆண்டிப்பட்டி,**

தேனி மாவட்டத்தில் கோடை மழை காரணமாக இயற்கை பசுந்தீவனம் அதிக அளவில் கிடைப்ப தால் கால்நடை வளர்ப்ப வர் கள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். இதனால் மேய்ச்சலுக்காக கால் நடைகளை அழைத்து செல்லும் தூரமும் குறைந் துள்ளது.

<u>கால்நடை வளர்ப்பு</u>

தேனி மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தென் மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்யவில்லை. குறிப் பாக, கடந்த ஆண்டு சராசரி யில் பாதி அளவு கூட மழை பெய்யவில்லை. இதன் காரண மாக தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விவ சாயம் மற்றும் குடிநீர் தேவைக்கான தண்ணீர் பற்றாக்குறை நிலவி வந்தது. தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக

கால்நடைகள் வளர்ப்பு தொழில் உள்ளது. கால்நடைகள் வளர்ப்பவர்கள் தங்களின் ஆடு, மாடுகளை மொத்தமாக அந்தந்த பகுதி களில் உள்ள மலைப்பகுதி களுக்கு மேய்ச்சலுக்காக அழைத்து சென்று வருகின்ற னர். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால் கால் நடைகளுக்கான இயற்கை பசுந்தீவனங்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டது.

பசுந்தீவனம்

தீவன பற்றாக்குறை காரண மாக ஆடு, மாடு மேய்ப்பவர்கள் கால்நடைகளை அழைத்துக் கொண்டு தினமும் 10 கிலோமீட்டர் தூரம் வரை அலைந்து செல்லும் நிலை இருந்து வந்தது. இந்த நிலையில் தேனி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து கோடை மழை பெய்து வரு கிறது.

மழையின் காரணமாக மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நிலம் ஈரப்பதத் துடன் காட்சியளிக்கிறது. தரிசு நிலங்களில் புல் மற்றும் பச்சை செடிகள் அதிகம் வளர்ந்துள்ளன. கோடை காலத்தில் ஏற்பட்ட பசுமை யால் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். தங்களின் கால் நடைகளை தங்கள் வீடுகளுக்கு அருகிலேயே மேய்ப்பதற்காக விடுகின்றனர். தேனி, ஆண்டிப் பட்டி பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், கால்நடை வளர்ப்பவர்கள் அலைச்சலில் இருந்து தங்க ளுக்கு தற்காலிக விடுதலை கிடைத்துள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**சிவகங்கையில் உயர்ரக பப்பாளி விலை வீழ்ச்சி**



விற்பனைக்காக சரக்கு வாகனத்தில் பப்பாளி ஏற்றப்படும் காட்சி.

**சிவகங்கை,**

சிவகங்கையில் உயர்ரக பப்பாளி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

பப்பாளி பழம்

பப்பாளி மருத்துவ குணம் கொண்டதாகும். கண் பார்வைக்கு ஏற்ற சிறந்த மருந் தாக கருதப்படும் பப்பாளி பல்வேறு நோய்களை குண மாக்கவும் பயன்படுத்தப்படு கிறது. இந்த பப்பாளியில் தற் போது, பல்வேறு புதிய வகை உயர் ரக பழங்கள் வந்து விட் டன.

அதிக எடை கொண்ட பப்பாளி பழங்கள் காய்க்கும் வகையில் தாய்லாந்து நாட்டில் உருவாக்கப்பட்ட பப்பாளி விதைகள் சிவகங்கை மாவட் டத்திற்கு கொண்டு வரப்பட் டது. அவை சிவகங்கையை அடுத்த கன்னிமார்பட்டி, மலம்பட்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த வகை பப்பாளிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.10க்கு விற்பனையானது. தற்போது, இதன் விலை வீழ்ச்சி அடைந் துள்ளது. இது குறித்து கன்னிமார்பட்டியை சேர்ந்த விவசாயி ராதா கூறிய தாவது:-

விலைவீச்சி

எனது வயலில் 1½ ஏக்கரில் இந்த உயர் ரக பப்பாளி பயி ரிட்டுள்ளேன். சொட்டுநீர் பாசனம் அமைத்துள்ளதால் தண்ணீர் நேரடியாக செல்வ துடன் விளைச்சலும் அதிக மாக கிடைக்கிறது.

ஒரு மரம் 15 அடி உயரம் வரை வளரும். ஒரு பப்பாளி 4 கிலோ எடையுள்ளதாக இருக்கும்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ பப்பாளியை கிலோ ரூ.10 அடிப்படையில் மொத்த வியாபாரிகள் வாங்கி சென்றனர். இந்த விலை சிறிது, சிறிதாக குறைந்து தற்போது கிலோ ரூ.3க்கு விற்பனையாகி றது.

இவ்வாறு அவர் கூறினார்.

## கடலுக்கு செல்லும் முன்பாக மீனவர்கள் சிறப்பு வழிபாடு



45 நாள் தடை காலம் முடிவடைந்து ராமேசுவரம் மீனவர்கள் மீன் பிடிக்க செல்வதையொட்டி இலங்கை கடற்படையால் பிரச்சினை இல்லாமல் இருக்கவும் அதிகளவில் மீன்கள் கிடைக்கவும் நேற்று விசைப்படகில் மீன்பிடி வலைகளை ஏற்றி சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்ட காட்சி.

**ராமேசுவரம்,**

மீன் பிடிக்க விதிக்கப்பட்டி ருந்த தடை காலம் முடிவடைந்ததை தொடர்ந்து மீனவர்கள் கடலுக்கு செல்லும் முன் பாக படகு மற்றும் மீன் பிடி சாதனங்களுக்கு சிறப்பு பூஜை நடத்தி வழி பாடு செய்தனர்.

தடை காலம்

தமிழகம் முழுவதும் உள்ள கடல் பகுதிகளில் ஏப்ரல் மாதம் 15-ந் தேதி முதல் மே மாதம் 29-ந் தேதி வரையி லும் மீன்கள் இனப்பெருக்க காலமாக உள்ளதால் 45 நாட்கள் மீன் பிடிக்க செல்ல விசைப்படகுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் படி கடந்த ஏப்ரல் 15-ந்தேதி முதல் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. இந்த தடை காலத்தில் படகுகளை மரா மத்து செய்தும், வர்ணம் பூசி யும் மீன்பிடிப்புக்கு தயார் நிலையில் வைத்துள்ளனர்.

இந்த நிலையில் 45 நாள் தடைக்காலம் நேற்று இரவு 12 மணியுடன் முடிவடைந்தது. ஆனால் ராமேசுவரம், மண் டபம் விசைப்படகு மீனவர் கள் வெள்ளிக்கிழமை விடு முறை நாள் என்பதால் கட லுக்கு மீன்பிடிக்க செல்லமாட் டார்கள். மறுநாள் கடலுக்கு செல்ல ஏதுவாக நாளை காலை 6 மணி முதல் மீன் துறை அலுவலகத்தில் முறையாக அனுமதி டோக்கன் பெறவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

வழிபாடு

மீன் பிடிக்க செல்வதை யொட்டி ராமேசுவரம் கடற் கரையில் நேற்று மீனவர்கள் வலைகள், ஐஸ் பெட்டிகள், மடிப்பலகை உள்ளிட்ட மீன் பிடி சாதனங்களை விசைப் படகுகளில் ஏற்றும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். மேலும் 45 நாட்களுக்கு பிறகு மீன்பிடிக்க செல்வதால் இலங்கை கடற்படையால் மீன வர்களுக்கு எந்த பிரச்சினை யும் ஏற்படக்கூடாது என்றும், அதிக மீன்கள் கிடைக்க வேண் டும் என்றும் படகுகளுக்கு முன்பாக நின்று தீபாராத னையுடன் வழிபாடு செய்தனர். இது பற்றி மீனவர் இருதயம் கூறும்போது, தடைக்காலம் முடிந்து 31-ந்தேதி காலை 6 மணி யில் இருந்து விசைப் படகு மீனவர்கள் மீன் பிடிகக் முடிவு செய்துள்ளோம். மத்தி யில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டி ருப்பதாலும், பதவியேற்பு விழா விற்கு இந்தியா வந்த இலங்கை அதிபர் ராஜபக்சேவுடன் மீன வர் பிரச்சினை குறித்து பிரத மர் நரேந்திரமோடி பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாலும் இலங்கை கடற்படையால் தொந்தரவுகள் இருக்காது என்று முழுமையாக நம்புவ தாக தெரிவித்தார். ராமேசு வரம், மண்டபம் பகுதியில் இருந்து சுமார் 1,300க்கும் மேற் பட்ட விசைப்படகில் 5,000த் திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்க செல்ல உள்ளனர் என்பது குறிப்பித்தக்கது.

**<u>கேரளாவுக்கு ஏற்றுமதியாகும் தொண்டி கருவாடுகள்</u>**



**தொண்டி,**

தொண்டி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பதப்படுத்தப்படும் கரு வாடுகள் கேரளாவுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகி றது.

கருவாடு

தொண்டி தாலுகா எஸ்.பி. பட்டினம் முதல் திருப்பா லைக்குடி வரையில் உள்ள கடலோர மீனவ கிராமங்களில் சுமார் 5,000க்கும் மேற் பட்ட நாட்டுப்படகு மீனவர் களும், 500க்கும் மேற் பட்ட விசைப்படகு மீனவர் களும் உள்ளனர்.

இப்பகுதியில் பிடி படும் மீன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டது.

ஆனாலும் சூடை மீனுக்கு மட்டும் மவுசு குறைவாக உள்ளது. இத னால் இந்த மீனுக்கு இங்கு விலை கிடைப்பதில்லை. ஆனால் கேரளா மாநிலத்தில் சூடை மீனுக்கு அதிக கிராக்கி இருப்பதால் அவற்றை கருவா டாக பதப்படுத்தி ஏற்று மதி செய்து வருகின்றனர்.

தொண்டி, சோழியக்குடி, லாஞ்சியடி, நம்புதாளை, மோர்ப்பண்ணை, திருப்பா லைக்குடி, காரங்காடு, முள்ளி முனை போன்ற கிராமங்களில் இருந்து கருவாடு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கேரளாவை சேர்ந்த வியாபா ரிகள் இங்கு வந்து கடற்கரை கிராமங்களில் தங்களுக்கென ஏஜெண்டுகளை நியமித்து மீனவர்கள் பிடித்து வரும் சூடை மீன்களை குறைந்த விலைக்கு வாங்கி அங்கேயே கருவாடாக பதப்படுத்தி வரு கின்றனர்.

இதன் மூலம் இப் பகுதியை சேர்ந்த ஏராளமா னோருக்கு நிரந்தரமாக வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. தொண்டி பகுதியில் சோழியக்குடி மற்றும் நம்பு தாளை கிராமங்களில் இந்த தொழில் பிரதானமாக நடை பெற்று வருகிறது.

இவ்வாறு பதப்படுத்தப்படும் கருவாடுகள் ஒரு மாதத்திற்கு பல நூறு டன்கள் கேரளாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**கோவில்பட்டியில் குறைந்த விலையில் இளநீர் விற்பனை மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தொடங்கி வைத்தார்**



**கோவில்பட்டி,**

கோவில்பட்டியில் குறைந்த விலையில் இளநீர் விற்பனையை மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தொடங்கி வைத்தார்.

இளநீர் விற்பனை மையம்

இளநீர் இயற்கை தந்த குளிர்பானம். ஆனால் அதன் தூய்மையும், குளுமையையும் உணராத இளைய தலைமுறைகள், அதை புறந்தள்ளிவிட்டு ஒருவகை போலி கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு, ரசாயன கலவையால் செயற்கையாக தயாரிக்கப்பட்ட குளிர்பானங்களை அருந்துவதை கவுரமாக கருதுகிறார்கள்.

உண்மை நிலையை அறிந்து உடல் ஆரோக்கியம் கருதி அனைவரும் இளகோவில்பட்டி யூனியன் அலுவலகம் முன் புது வாழ்வு திட்டம், இளையரசனேந்தல் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் சார்பில், மலிவு விலை இளநீர் விற்பனை மையம் தொடங்கப்பட்டு உள்ளது.

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் தலைமை தாங்கி, இளநீர் விற்பனை மையத்தை திறந்து வைத்தார். அதற்கு அடையாளமாக ஒரு இளநீரை அவரே அரிவாளால் சீவி ஒருவருக்கு வழங்கினார்.

இந்த மையத்தில் நாட்டு இளநீர் சிறியது ரூ.15–க்கும், நாட்டு இளநீர் பெரியது ரூ.18–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

<u>அமோக விற்பனை</u>

விழாவில் கலெக்டர் ம.ரவிகுமார் பேசும் போது கூறியதாவது:–

கோடை காலத்தை பொதுமக்கள் சமாளிக்கும் வகையில், புதுவாழ்வு திட்ட கிராம வறுமை ஒழிப்பு சங்கம் சார்பில், குறைந்த விலையில் இளநீர் விற்பனை செய்யப்படுகிறது. வெளி இடங்களில் ரூ.20 முதல் ரூ.35 வரை விற்பனையாகும், இளநீரை இங்கு குறைந்த விலையில் ரூ.15 முதல் ரூ.18 வரை விற்பனை செய்கிறோம். இதை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். விரைவில் தூத்துக்குடி உள்ளிட்ட மற்ற இடங்களில் மலிவு விலை இளநீர் விற்பனை தொடங்கப்படும். செவ்விளநீர் விற்பனையும் விரைவில் தொடங்கப்படும். பருவநிலை மாறுபடும் காலங்களில் மாற்று பொருள் விற்பனை செய்யப்படும். இவ்வாறு கலெக்டர் ரவிகுமார் கூறினார்.

<u>அமோக விற்பனை</u>

நேற்று மதியம் வரையில் சுமார் 700–க்கு மேற்பட்ட இளநீர் விற்பனையானது. இங்கு தினமும் சுமார் 1,000 இளநீர் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விழாவில் உதவி கலெக்டர் டாக்டர் விஜய கார்த்திகேயன், புதுவாழ்வு திட்ட மேலாளர் தரணி, உதவி திட்ட மேலாளர் சுமதி, தாசில்தார் முத்துராமலிங்கம், துணை தாசில்தார் ராஜ்குமார், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் பாஸ்கர், யூனியன் ஆணையாளர் ராஜன், அரி ராஜகிருஷ்ணன், டாக்டர் சங்கர நாராயணமூர்த்தி, ஜான்சன், அமலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>ஜூன் 7, 8–ந் தேதி நடக்கும் ஏற்காடு கோடைவிழா, மலர் கண்காட்சி தொடர்பான முன்னேற்பாடுகள் தீவிரம் தொடக்க விழாவில் 3 அமைச்சர்கள் பங்கேற்பு</u>

**சேலம்,**

ஏற்காட்டில் ஜூன் 7–ந் தேதி மற்றும் 8–ந் தேதி நடக்கும் 39–வது கோடைவிழா–மலர் கண்காட்சி தொடர்பான முன்னேற்பாடுகளுக்கான பணிகள் தீவிரமாக நடந்து வருவதாக கலெக்டர் மகரபூஷணம் தெரிவித்தார்.

<u>முன்னேற்பாடு குறித்த கூட்டம்</u>

ஏற்காடு கோடை விழா தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நேற்று நடந்தது. கூட்டத்தில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சக்திவேல், மாநகர போலீஸ் துணை கமிஷனர் பிரபாகரன், சேலம் மாநகராட்சி ஆணையாளர் கே.ஆர்.செல்வராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜசேகரன், சேலம் உதவி கலெக்டர் லலிதாவதி, ஏற்காடு தாசில்தார் மணிவண்ணன், தோட்டக்கலைத்துறை அலுவலர் கணேசன், உதவி இயக்குனர் கண்ணன், உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் டாக்டர் அனுராதா, சமூக நல அலுவலர் அன்பு உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், ஏற்காடு கோடை விழாவில் ஒவ்வொரு துறைக்கும் வழங்கப்பட்ட பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

கூட்டம் முடிந்த பின்னர் கலெக்டர் மகரபூஷணம் நிருபர்களிடம் கூறியதாவது:–

<u>3 அமைச்சர்கள் பங்கேற்பு</u>

ஆண்டு தோறும் ஏற்காடு கோடைவிழா மற்றும் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்தாண்டு 39–வது கோடைவிழா மற்றும் மலர் கண்காட்சி ஜூன் மாதம் 7–ந் தேதி மற்றும் 8–ந் தேதி ஆகிய இரண்டு தினங்கள் சிறப்பாக நடத்தப்படும். தொடக்க விழா நிகழ்ச்சியில் தமிழக நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் இடைப்பாடி பழனிச்சாமி, வேளாண்மைத்துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, சுற்றுலாத்துறை அமைச்சர் சண்முகநாதன் மற்றும் வேளாண்துறை அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலாத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

விழாவில் பிரபல பின்னணி பாடகிகள் சுசிலா, சின்னப்பொன்னு ஆகியோரது கலைநிகழ்ச்சி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் வாகனங்களை நிறுத்துவதற்கு தாவரவியல் பூங்கா மற்றும் மரபியல் பூங்கா ஆகிய இரண்டு இடங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு ரூ.40 கட்டணம் குறைக்கப்பட்டு, தற்போது ரூ.10 கட்டணம் வசூல் செய்யப்படும்.

ஒருவழிப்பாதை

வழக்கம்போல கோடை விழா நடக்கும் இரு நாட்களும், பஸ்களை தவிர்த்து இதர வாகன போக்குவரத்து ஒருவழிப்பாதையாக மாற்றப்படுகிறது. அதாவது ஏற்காடு செல்லும்போது சேலத்தில் இருந்து ஏற்காடு அடிவாரம் சென்று மலைப்பாதை வழியாக செல்லவும், இறங்கும்போது இதர வாகனங்கள் மாற்றுவழியாக கொட்டச்சேடு, குப்பனூர், அயோத்தியாப்பட்டணம் வழியாக சேலம் வரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகளுக்கு குடிநீர், கழிப்பிட வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை சார்பில் ஹார்னேசன், ஹெர்பெரா, ஆர்கிட்லப், கிரசாந்த், மேரிகோல்டு, பிரான்ஸ், அமெரிக்கா வகைப் பூக்கள் உள்ளிட்ட 25 வகையான மலர்ச்செடிகள் 20 ஆயிரம் தொட்டிகளில் தயார் நிலையில் உள்ளது. ஆண்டுதோறும் சுற்றுலா பயணிகளுக்கு மலிவு விலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிலும் மலிவு விலை உணவு வழங்கப்படும்.

4 இடங்களில் கலைநிகழ்ச்சி

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நாய்க்கண்காட்சி, சுற்றுலாத்துறையின் சார்பில் படகுப்போட்டி, மகளிர் திட்டத்தின் சார்பில் கோலப்போட்டி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் பாரம்பரிய உணவு திருவிழா மற்றும் கொழு கொழு குழந்தைகள் போட்டி, தவளும் குழந்தைகள் போட்டி, குதிரை சவாரி, சுகாதாரத்துறையின் சார்பில் மருத்துவக்குழு, மோட்டார் வாகன பழுது பார்க்கும் மையம் ஆகியவை நடத்தப்பட உள்ளது.

சேர்வராயன் கோவில், தலைச்சோலை, அண்ணா கலையரங்கம், வெளி விளையாட்டு அரங்கம் என 4 இடங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது. காவல் துறையின் சார்பில் பாதுகாப்பு ஏற்பாடு மற்றும் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கும் கூடுதல் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மேலும் சாரணர் இயக்கத்தை சேர்ந்தவர்களும் போலீசாருடன் வாகன போக்குவரத்தை சீர்செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

<u>‘ஹெல்மெட்‘ கட்டாயம்</u>

போலீஸ் சூப்பிரண்டு சக்திவேல் கூறுகையில், ‘‘ஏற்காடு மலைப்பாதையில் சுற்றுலா பயணிகளுக்கு விபத்தை தவிர்க்கும் வகையில் இருசக்கர வாகனங்களில் 2 பேர் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவார்கள். ஒரே மோட்டார் சைக்கிளில் 3 பேர், 4 பேர் சென்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இருசக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் ‘ஹெல்மெட்‘ அணிந்துதான் வாகனத்தை ஓட்டிச்செல்ல வேண்டும். ஏற்காடு கோடைவிழா கலைநிகழ்ச்சியில், காவல்துறை சார்பிலும் கலைநிகழ்ச்சி இந்த ஆண்டு நடத்தப்படுகிறது‘‘ என்றார்.

<u>பாக்ஸ் செய்தி – ஏற்காட்டில் இருந்து(டாப் ஹெட்) – பஞ்சபூத ஸ்தலங்களுக்கு ‘‘பேக்கேஜ்டூர்‘‘ அறிமுகம்</u>

ஏற்காட்டில் கோடைவிழா நடக்கும் நாட்களில் சுற்றுலா பயணிகளை வசதிகாக குறைந்த கட்டணத்தில் அரசு பஸ் இயக்கப்படுவது வழக்கம். அதாவது ஏற்காடு ஏரி(லேக்) பகுதியில் இருந்து லேடீஸ் சீட், ஜென்ஸ் சீட், ரோஜா கார்டன், பொட்டனிக்கல் கார்டன், சேர்வராயன் மலைக்கோவில், தலைச்சோலை, கிளியூர் நீர் வீழ்ச்சி உள்ளிட்ட சுற்றுலா தலங்களுக்கு ‘பேக்கேஜ் டூர்‘ ஆக பயணிகள் அழைத்து செல்லப்படுவார்கள். இந்த ஆண்டும் அதுபோல ‘பேக்கேஜ்டூர்‘ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு புதிதாக ஏற்காட்டில் இருந்து ‘பஞ்சபூத ஸ்தலங்களுக்கு‘ பேக்கேஜ்டூர் அறிமுகம் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

காலை, மதியம், மாலை என 3 அரசு பஸ்கள் ஏற்காட்டிலிருந்து குப்பனூர் வழியாக பேளூர், ஏத்தாப்பூர், ஆத்தூர், ஆறகளூர் மற்றும் தென்பொன்பரப்பி ஆகிய 5 வழிபாட்டு தலங்களை பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்ததாக காலை, மதியம், மாலை என 3 வேளையிலும் ஏற்காட்டில் இருந்து சேலம், தாரமங்கலம், மேச்சேரி, நங்கவள்ளி, மேட்டூர் ஆகிய இடங்களுக்கு பயணிகள் பேக்கேஜ்டூர் சென்று வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் மகரபூஷணம் தெரிவித்தார்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## எல் நீன்யோ – என்ன செய்யப்போகிறோம்?



'எல் நீன்யோ' (El Nino) என்பது பசிபிக் கடல் பரப்பின் மேல் ஏற்படும் ஒருவித வெப்பநிலை மாற்றம். இது குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும். இதன் காரணமாகப் பருவமழைக் குறைவு ஏற்படக்கூடிய ஆசிய நாடுகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன.

இதற்கு முன்பொருமுறை 'எல் நீன்யோ' வந்தபோது அரிசி உள்ளிட்ட உணவு தானியங்களின் விளைச்சல் கடுமையாகக் குறைந்து, விலை ஏகமாக உயர்ந்ததை அந்த அரசுகள் மறக்கவில்லை.

இதனால், மக்களிடையே கொந்தளிப்பு அதிகரித்து சமூக அமைதியும் குலைந்தது.

இந்தோனேசிய அரசு நெல் பயிர் சாகுபடியைத் தேதிவாரியாக எப்படிச் செய்ய வேண்டும் என்று விவசாயிகளுக்கு அட்டவணையே வகுத்துக்கொடுத்துவிட்டது.

மலேசியாவும் பிலிப்பைன்ஸும் மழை நீரைச் சேமிக்கவும், வீணாக்காமல் பயன்படுத்தவும் நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டன. இந்தியா முடைக்காலக் கையிருப்பை அதிகப்படுத்திவருகிறது.

**கடந்தகால வறட்சிகள்**

2007-ல் ஏற்பட்ட எல் நீன்யோவின்போது, உணவுதானிய விளைச்சல் வெகுவாகக் குறைந்து, விலைவாசி உயர்ந்தது. 2008-ல் ஒரு டன் அரிசியின் விலை 1,000 டாலருக்கும் மேல் விற்றது. எகிப்து, கேமரூன், ஹைதி போன்ற நாடுகளில் உணவு தானியக் கலவரம் தலைதூக்கியது.

2009-ல் ஏற்பட்ட எல் நீன்யோ இந்தியாவைக் கடுமையாகப் பாதித்தது. அதற்கு முந்தைய 40 ஆண்டுகளில் இருந்திராத அளவுக்கு வறட்சி நிலவியது. அரிசி விளைச்சலில் மட்டும் சுமார் 10 லட்சம் டன்கள் அளவுக்கு இழப்பு ஏற்பட்டது. உலக அளவில் சர்க்கரை விலை, 30 ஆண்டுகளில் இருந்திராத அளவுக்கு, வரலாறு காணாத வகையில் உயர்ந்தது.

இந்த ஆண்டின் நடுப்பகுதியில் எல் நீன்யோ பாதிப்பு ஏற்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை எச்சரிக்கை அறிக்கை தெரிவிக்கிறது. வழக்கமாக இந்தோனேசியாவும் பிலிப்பைன்ஸும்தான் இதனால் அதிகம் பாதிக்கப்படும் என்று பாங்காக் நகரில் உள்ள உலக உணவு, வேளாண்மை அமைப்பின் பிரதிநிதியும் மூத்த பொருளியல் அறிஞருமான டேவிட் டாவேஸ் தெரிவிக்கிறார்.

**கோதுமையைக் காத்த விஞ்ஞானி**



இந்தியாவின் முக்கிய விவசாய விஞ்ஞானியான பெஞ்சமின் பியாரி பால்1906-ம் ஆண்டு மே 26-ல் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள முகுந்த்பூரில் பிறந்தார். சிறுவயதில்

அவர் பர்மாவில் தனது நாட்களைக் கழித்தார். பள்ளியில் படித்தபோதும் கல்லூரிக் காலத்திலும் அநேகப் பரிசுகளைப் பியாரி பால்வாரிக் குவித்துள்ளார்; கல்வி உதவித் தொகைகளும் அவருக்குக் கிடைத்துள்ளன. அவரது தந்தை மருத்துவராக இருந்தார். அவர் தனது ஆர்வம் காரணமாக ஓய்வு நேரத்தைத் தோட்டத்தில் செலவிடுவார். பூச்செடிகளை வளர்ப்பதும், காய்கறிகளைப் பயிரிடுவதும் அவரது பொழுதுபோக்கு. எனவே சிறுவயதிலேயே தந்தை மூலமாகச் செடி, கொடிகள் உள்ளிட்ட தாவர வகைகள் பியாரி பாலுக்கு அறிமுகமாயின.

பியாரி பாலின் தந்தை, தோட்டவேலையில் சோர்வடையும்போது பாலைத் தோட்டத்தைக் கவனித்துக்கொள்ளும்படி கோருவார். பியாரி பாலும் அதை விருப்பத்துடன் நிறைவேற்றிவந்தார். வெறுமனே தோட்டத்தைக் கவனிப்பதுடன் நில்லாமல் தாவரங்கள் குறித்த தனது அறிவையும் புத்தகங்கள் மூலம் பியாரி பால்வளர்த்துக்கொண்டார். இதனால் ஆயுள் முழுவதும் தாவரங்கள் பியாரி பாலுக்கு உற்ற தோழனாக விளங்கின. பியாரி பால்தனது இளங்கலை, முதுகலைப் பட்டங்களை ரங்கூன் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். 1929-ல் கோதுமை தொடர்பான ஆராய்ச்சிக்காக அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பிஎச்டி பட்டம் பெற்று பர்மாவுக்குத் திரும்பினார்.

1933-ல் புதுடெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் அவருக்கு ஆய்வுப் பணி கிடைத்தது. இந்திய விடுதலைக்கு முன்னர் இந்தியாவில் அதிகமாக ஆராய்ச்சி நடந்ததில்லை என்கிறார்கள். பயிர்கள் எல்லாம் நோய்களுக்கு இரையாயின. கோதுமைப் பயிரைப் பூஞ்சை நோய் தாக்கியதால் அப்பயிர் பெருவாரியாக அழிவுற்றது. கோதுமை அதிக விளைச்சலைக் கொடுக்க முடியாமல் வதங்கியது. இதைக் கண்ட பியாரி பால்புது வகைக் கோதுமைப் பயிரைக் கண்டறிய முனைந்தார்.

என்பி 700, 800 வகைக் கோதுமைகளை அவர் உருவாக்கினார். இவை குறிப்பிட்ட ஒரு பூஞ்சை நோயைத் தான் முறியடித்தது. ஆனால் 1954-ல் அவர் என்பி 809 ரகக் கோதுமையைக் கண்டறிந்த பின்னர்தான் இந்த முயற்சியில் அவருக்கு முழு வெற்றி கிடைத்தது. இந்த ரகம் கோதுமையைத் தாக்கும் மூன்று விதப் பூஞ்சை நோய்களையும் எதிர்த்து நின்று மகசூலை அள்ளிக் கொடுத்தது. இந்தியக்

கோதுமை உற்பத்தியில் அவரது பங்களிப்பு முக்கியமானது. உலகம் முழுவதும் அவரது கண்டுபிடிப்புக்கு வெகுவான பாராட்டுக் கிடைத்தது.

1965-ல் பியாரி பால்இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் (Indian Council of Agricultural Research - ICAR) தலைமை இயக்குநரானார். அவர், சுமார் 40 வகைப்பட்ட ரோஜா ரகங்களையும் உருவாக்கியுள்ளார். ரோஜாச் செடிகள் தொடர்பாக அநேகப் புத்தகங்களையும் எழுதியுள்ளார். 1987-ல் இந்திய அரசு அவருக்கு பத்ம விபூஷன் விருதளித்துக் கௌரவித்தது. 1989-ம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று அவர் காலமானார்.